REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 11 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN

90 ANNIVERSARY 1932 - 2022

வரு. 90 இல. 188 | Thursday 11, August, 2022 | 8பக்கங்கள் | 40/-


ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தியபோது பிடிக்கப்பட்ட படம்.


ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்திய பின் எடுக்கப்பட்ட படம். இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனும் பாராளுமன்ற உறுப்பினர் சீ. வி விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியுடனும் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்.

## முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இன்று தாய்லாந்து பயணம்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்று வியாழக்கிழமை (11) தாய்லாந்து பயணிக்கவுள்ளாரென ரொய்ட்டர்ஸ் சர்வதேச செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மனிதாபிமான காரணங்களுக்காக தாய்லாந்தில் தற்காலிகமாக தங்கியிருப்பதை தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான்ஓசா மற்றும் வெளியுறவு அமைச்சர் டொன் பிரமுத்வினாய் ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## ஜனாதிபதி ரணில் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை

### UNP, SJB இணைந்து பயணிக்க வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மீது மக்கள் புதிய எதிர்பார்ப்புடன் உள்ளதால் மக்களுக்கு போராட்டங்கள் போதும் என்ற நிலை வந்து விட்டது என பாராளுமன்றத்தில் தெரிவித்த அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்று கையிலேயே

05

### பஸ் கட்டணங்கள் குறைப்புக்கு எதிராக

## தனியார் பஸ் உரிமையாளர்கள் NTC அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல்

**உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பந்துல அமைச்சின் செயலாளருக்கு பணிப்பு**



பஸ் கட்டணக் குறைப்புக்கு எதிராக தனியார் பஸ் உரிமையாளர்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

பஸ் கட்டணங்களை திருத்தியது தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சபையின் அதிகாரிகள் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் தனியார் பஸ் உரிமையாளர்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலக வளாகத்தில் குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஏனைய அதிகாரிகளையும் தொலைபேசியூடாக கெட்ட வார்த்தைகளால் திட்டித் தீர்த்துள்ளனர்.

அத்துடன் அவர்களை படுகொலை செய்துவிடுவதாகவும் மிரட்டியுள்ளனர்.

இது தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தால் நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணையொன்றை

05

## ஜெனீவா கூட்டத் தொடருக்கு முகங்கொடுக்க தயாராகும் இலங்கை

### நீதி மற்றும் வெளிவிவகார அமைச்சர்கள் தலைமையில் கலந்துரையாடல்



ஐக்கிய நாடுகளின் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடருக்கு முகம் கொடுக்கும் வகையில் இலங்கை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கையை இலங்கை ஆரம்பித்துள்ளது. நீதி மற்றும் சிறைச்சாலைகள், மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

05



### தேர்தல் மற்றும் தேர்தல் கட்டமைப்பில் திருத்தங்கள்;

## பாராளுமன்ற சிறப்புக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்க இணக்கம்

03

### பாராளுமன்ற புதிய அமர்வின் பின்னரான

## தேநீர் விருந்துபசார செலவை செலுத்திய ஜனாதிபதி ரணில்!

### தனது சொந்த பணத்திலிருந்து செலுத்தினார்





பாராளுமன்றத்தின் புதிய அமர்வு ஆரம்பிக்கப்பட்ட தினத்தன்று நடைபெற்ற தேநீர் வைபவத்துக்கான முழுச் செலவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட பணத்தில் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஆலோசகர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார். இவ்வாறு அன்றைய

05

## அரசியலமைப்பின் 22 வது திருத்தம் நேற்று பாராளுமன்றில்

### நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் சமர்ப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் நேற்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

21 ஆவது

05

## மின்சார கட்டண அதிகரிப்பு சபையில் விவாதம் அவசியம்

### அதுவரை இடைநிறுத்த எதிர்க்கட்சி கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் பாராளுமன்ற விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டுமென்றும் அந்த விவாதம் நடத்தப்படும் வரை மின்சார கட்டண அதிகரிப்பு இடைநிறுத்தப்பட வேண்டும் என்றும் எதிர்க் கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அரச தலைவர்களை

05

## மஹிந்த, பசில் மீதான பயணத்தடை நீடிப்பு

### செப்.05 வரை நீடித்தது நீதிமன்றம்



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்ட சர்வதேச பயணத்தடையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை நீடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உச்ச

05

## பஸ்களில் அதிக கட்டணம் வசூலிப்பதாக முறைப்பாடு

### திடீர் சோதனைகளுக்கு நடவடிக்கை



திருத்தப்பட்ட பேருந்து கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பேருந்து ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம்

05

## 19ஆம் திகதி முதல் வழமை போன்று மண்ணெண்ணெய் விநியோகம்

### விலை திருத்தம் கொண்டு வரவும் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



மசகு எண்ணெய் கப்பல் விரைவில் நாட்டுக்கு வருவதையடுத்து எதிர்வரும் 19ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெறுமென மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில்

05

### பொலிஸாரின் உத்தரவை மீளப்பெறும்

## மனுக்களை மீளப்பெற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள்

### காலிமுகத்திடலிலிருந்து வெளியேறுவதாக அறிவிப்பு



காலி முகத்திடல் போராட்ட களத்தில் இருந்து வெளியேறுமாறு பிறப்பித்த பொலிஸாரின் உத்தரவை நிராகரிக்குமாறு கோரி

05

### அமரகீர்த்தி அத்துகோரள எம்.பியின்

## மோதிரங்களை களவாடிய இரு சந்தேக நபர்கள் கைது

### எதிர்வரும் 22 வரை விளக்கமறியலில்



நிட்டம்புவ நகரில் மே 9ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள அணிந்திருந்த தங்க மோதிரங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

05

### அம்பாறைக்கு கடத்துவதற்காக

## பதுக்கி வைக்கப்பட்டிருந்த 19,000 லீற்றர் டீசல் மீட்பு

### ஹம்பாந்தோட்டையில் STF அதிரடி



ஹம்பாந்தோட்டைமீன்பிடி துறைமுகத்திலிருந்து அம்பாறை பிரதேசத்துக்கு சட்டவிரோதமாக கொண்டு செல்வதற்கு தயார் நிலையிலிருந்த 19,000 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டதுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது

05

### 12 மில்.ரூபா பெறுமதியான தங்கம் கடத்தல்

## சுங்க அதிகாரிகளிடம் சிக்கிய தம்பதியினர்!



ஒரு கோடி இருபது இலட்சம் ரூபா (12 மில்லியன் ரூபா) பெறுமதியான தங்க நகைகளை சட்டவிரோதமான

05

### நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில்

## 103 சீன பிரஜைகளுக்கு கொவிட் தொற்று உறுதி

### PHI சங்கத் தலைவர் உபுல் தெரிவிப்பு



நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் பணியாற்றிய 103 சீன பிரஜைகளுக்கு கொவிட்19 தொற்று உறுதியாகியுள்ளதாக, பொது சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

05

## தபால் கட்டணங்கள் ஓக.15 முதல் அதிகரிப்பு

SRI LANKA POST
இலங்கை அஞ்சல் திணைக்களம்
Department of Posts - Sri Lanka

தபால் கட்டணங்கள் எதிர்வரும் 15ம் திகதி திருத்தம் செய்யப்படவுள்ளது.

இதன்படி 15 ரூபாவாக உள்ள சாதாரண கடிதத்திற்கான தபால் கட்டணம் 50 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதிவு செய்யப்பட்ட தபால் கட்டணம் 45 ரூபாவில் இருந்து 110 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாகவும்

05

### அரசிலிருந்து வெளியேறிய 10 கட்சிகளின்

## புதிய கூட்டணியின் பெயர் 21 ஆம் திகதி அறிவிக்கப்படும்

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 10 சுயேட்சை கட்சிகளின் புதிய கூட்டணியின் பெயர் எதிர்வரும் 21 ஆம் திகதி வெளியிடப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார

05

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

## பொது அறிவித்தல்

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30(2) (உ) பிரிவின்படி, இலங்கை மின்சாரசபை மற்றும் லங்கா மின்சார தனியார் நிறுவனம் ஆகியன அறவிடும் மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இதன்மூலம் அறிவிப்பை வெளியிடுகிறது. 2022 ஆகஸ்ட் 10ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்.

### குறைந்த மின்னழுத்த சில்லறை விநியோகத்திற்கான இறுதி பயனாளர் கட்டணங்கள்

400/230 வோல்ட் பெயரளவில் வழங்கப்பட்ட மற்றும் அளவிடப்பட்ட ஒவ்வொரு விநியோக புள்ளியிலும், ஒப்பந்தத் தேவை 42 kVA க்கும் குறைவாகவோ அல்லது அதற்கு சமமாகவோ இருந்தால், பின்வரும் விகிதங்களில் விநியோகிக்கப்படும்.

| வகை | நுகர்வுத் தொகுதி / பயன்பாட்டின் காலம் | சக்திக்கான கட்டணம் (ரூபா/kWh) | நிலையான கட்டணம் (ரூபா/மாதம்) |
|---|---|---|---|
| இல்லம் சார்ந்த D-1 | ஒரு மாதத்திற்கு 0 - 60 kWh நுகர்வு எனின் (அதிகரிக்கும் தொகுதி) | | |
| | தொகுதி 1: 0-30 kWh | 8.00 | 120.00 |
| | தொகுதி 2: 31-60 kWh | 10.00 | 240.00 |
| | ஒரு மாதத்திற்கு 60 kWhக்கு மேல் நுகர்வு இருந்தால் (அதிகரிக்கும் தொகுதி) | | |
| | தொகுதி 1: 0-60 kWh | 16.00 | - |
| | தொகுதி 2: 61-90 kWh | 16.00 | 360.00 |
| | தொகுதி 3: 91-180 kWh | 50.00 | 960.00 |
| | தொகுதி 4: 180 kWh க்கு மேல் | 75.00 | 1,500.00 |
| | இல்லம் சார்ந்த – உச்ச பயன்பாட்டிற்கான நேரக் கட்டணம் | | |
| | உச்சகட்ட பாவனை நேரம் (18:30 - 22:30 மணிநேரம்) | 90.00 | 1,500.00 |
| | நாள் பாவனை(05:30 - 18:30 மணிநேரம்) | 70.00 | |
| | உச்சகட்ட பாவனையற்ற நேரம் (22:30 – 05:30 மணிநேரம்) | 30.00 | |
| வணக்கஸ்தலம் R-1 | ஒரு மாதத்திற்கான நுகர்வு (அதிகரிக்கும் தொகுதி) | | |
| | தொகுதி 1: 0-30 kWh | 8.00 | 90.00 |
| | தொகுதி 2: 31-90 kWh | 15.00 | 120.00 |
| | தொகுதி 3: 91-120 kWh | 20.00 | 120.00 |
| | தொகுதி 4: 121-180 kWh | 30.00 | 450.00 |
| | தொகுதி 5: 180 kWh க்கு மேல் | 65.00 | 1,500.00 |
| தொழிற்துறை I-1 | ஒரு மாதத்திற்கான நுகர்வு (தொகுதி வேறுபடுத்தப்பட்டது) | | |
| | 0-300 kWh | 20.00 | 960.00 |
| | 300 kWh க்கு மேல் | 20.00 | 1,500.00 |
| | தொழில்துறை – விவசாய தேவை உச்ச பயன்பாட்டிற்கான நேரக் கட்டணம் | | |
| | உச்சகட்ட பாவனை நேரம் (18:30 - 22:30 மணிநேரம்) | 35.00 | 1,500.00 |
| | நாள் பாவனை(05:30 - 18:30 மணிநேரம்) | 20.00 | |
| | உச்சகட்ட பாவனையற்ற நேரம் (22:30 – 05:30 மணிநேரம்) | 15.00 | |
| பொதுவான நோக்கம்(GP-1), ஹோட்டல்(H-1), அரசாங்கம்(GV-1) | ஒரு மாதத்திற்கான நுகர்வு (தொகுதி வேறுபடுத்தப்பட்டது) | | |
| | 0-180 kWh | 25.00 | 360.00 |
| | 180 kWh க்கு மேல் | 32.00 | 1,500.00 |
| | வீதி விளக்கு | 22.00 | - |

### குறைந்த மின்னழுத்த மொத்த விநியோகத்திற்கான இறுதி பயனாளர் கட்டணங்கள்

400/230 வோல்ட் பெயரளவில் வழங்கப்பட்ட மற்றும் அளவிடப்பட்ட மற்றும் ஒப்பந்தத் தேவை 42 kVA ஐ விட அதிகமாக இருக்கும் ஒவ்வொரு விநியோகப் புள்ளியிலும் பின்வரும் விகிதங்கள் பொருந்தும். இந்தக் கட்டணங்கள் அனைத்து வகைகளுக்கும் பொருந்தும்: தொழிற்துறை (I-2), ஹோட்டல் (H-2), அரசாங்கம் (GV-2) மற்றும் பொதுவான நோக்கம (GP-2).

| பயன்பாட்டின் காலம் | சக்திக்கான கட்டணம் (ரூபா/kWh) | நிலையான கட்டணம் (ரூபா/மாதம்) | மாதாந்த அதிகபட்ச தேவைக்கான கட்டணம் (ரூபா/kVA) |
|---|---|---|---|
| உச்சகட்ட பாவனை நேரம் (18:30 - 22:30 மணிநேரம்) | 34.50 | 4,000.00 | 1,500.00 |
| நாள் பாவனை(05:30 - 18:30 மணிநேரம்) | 29.00 | | |
| உச்சகட்ட பாவனையற்ற நேரம் (22:30 – 05:30 மணிநேரம்) | 15.00 | | |

### மொத்த விநியோகத்திற்கான நடுத்தர மின்னழுத்த இறுதி பயனாளர் கட்டணங்கள்

பின்வரும் விகிதங்கள் 11,000 வோல்ட் பெயரளவு மற்றும் அதற்கு மேல் வழங்கப்படும் அளவிடப்பட்ட ஒவ்வொரு விநியோக புள்ளியிலும் விநியோகிக்கப்படும். இந்தக் கட்டணங்கள் அனைத்து வகைகளுக்கும் பொருந்தும் தொழில் (I-3), ஹோட்டல் (H-3), அரசாங்கம் (GV-3), மற்றும் பொது நோக்கம் (GP-3).

| பயன்பாட்டின் காலம் | சக்திக்கான கட்டணம் (ரூபா/kWh) | நிலையான கட்டணம் (ரூபா/மாதம்) | மாதாந்த அதிகபட்ச தேவைக்கான கட்டணம் (ரூபா/kVA) |
|---|---|---|---|
| உச்சகட்ட பாவனை நேரம் (18:30 - 22:30 மணிநேரம்) | 34.00 | 4,000.00 | 1,400.00 |
| நாள் பாவனை(05:30 - 18:30 மணிநேரம்) | 28.00 | | |
| உச்சகட்ட பாவனையற்ற நேரம் (22:30 – 05:30 மணிநேரம்) | 14.00 | | |

ஏனைய தீர்மானங்கள்

- குறைந்த மின்னழுத்தம் கொண்ட சில்லறை விநியோகத்தில், நெட்-மீட்டரிங் மற்றும் நெட்-கணக்கியல் திட்டங்களின் கீழ் கூரைமேல் சோலார் படலங்களை கொண்ட நுகர்வோருக்கு மாதாந்த நிலையான கட்டணங்கள் அவர்களின் உண்மை நிகர இறக்குமதி செய்யப்பட்ட மின்சாரத்திற்கு பொருந்தக்கூடிய மாதாந்த நிலையான கட்டணமாக அறவிடப்படும்.
- கைத்தொழில், ஹோட்டல் மற்றும் பொது-நோக்கத்துக்கான வகை நுகர்வோர் தனது வெளிநாட்டு வருமானத்தில் 60% க்கும் அதிகமான வருமானத்தை ஈட்டுபவர்கள் எனின் இலங்கை மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட கொள்வனவு விகிதத்தில் மாற்றப்பட்ட அமெரிக்க டொலர்களில் (USD) மின் கட்டணத்தை செலுத்த வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் வரும் நுகர்வோருக்கு அவர்களின் மின்சார பட்டியலுக்கு 1.5% தள்ளுபடி சலுகை வழங்கப்படும். இந்தத் திட்டம் 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01,ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்.
- ஹோட்டல் வகை நுகர்வோருக்கு 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி முதல் கட்டண உயர்வில் 50% அறவிடப்படும், மீதமுள்ள 50% 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்.

ஆணைக்குழுவின் உத்தரவுப்படி

**ஜனக ரத்நாயக்க**
தலைவர்

இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.

**தொலைபேசி** : 011 239 2607/8
**தொலைநகல்:** 011 239 2641
**மின்னஞ்சல்:** info@pucsl.gov.lk
**இணையதளம்:** www.pucsl.gov.lk

திகதி: 11.08.2022

---

நாசகார செயல்களால்

# யாழில் மாலைவேளை மூடப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

*யாழ்.விசேட நிருபர்*

யாழில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவுகளில் குழப்பங்கள், விரும்பத்தகாத செயல்கள் நடைபெறுவதனால் மாலை வேளையுடன் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படுவதாக யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழில் இயங்கும் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாலை வேளையுடன் மூடப்படுகின்றன. அது தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருந்தேன்.

அதன் போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாலை வேளைகளில் மது போதையில் கூடுபவர்கள் கறுப்பு சந்தை வியாபாரிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை ஏற்படுத்துவதுடன், விரும்பத்தகாத செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இதனால் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகிறது. ஆகவே தாம் மாலை வேளையுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூடுவதாக உரிமையாளர்கள் தெரிவித்தனர். எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் அப்பகுதி பிரதேச செயலர் ஆகியோரின் முடிவின் பிரகாரம் மாலையுடன் மூடுவதா இல்லையா என முடிவெடுக்கப்படும் என தெரிவித்தார்.

## தெல்லிப்பளையில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் பகுதியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையமொன்றிக்குள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாள்வெட்டு சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை அன்று மாலை நுழைந்த வன்முறைக் கும்பலொன்று நடாத்திய வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தெல்லிப்பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கின் உதயம்

## நல்லூரில் போலி நாணயத்தாள்களை கடையில் மாற்றியவர் கைது

*யாழ். விசேட நிருபர்*

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய சூழலில் உள்ள கடைகளில் போலி ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களினை வழங்கி பொருள்கள் வாங்கிய ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 2 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களும், அவரால் 3 கடைகளில் வழங்கிய 3 ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

ஆலய திருவிழாவின் முதல் மூன்று நாள்களில் மூன்று வெவ்வேறு கடைகளுக்கு சென்ற குறித்த நபர், போலி ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களை வழங்கி கச்சான், பழங்களை 200 ரூபாய்க்குள் வாங்கி மிகுதி பணத்தை பெற்றுச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

விசாரணைகளின் அடிப்படையில் நல்லூரடியைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார். சந்தேக நபருக்கு போலி நாணயத்தாள்களை அச்சிட்டு வழங்கியவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் கூறினர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

# உறவினர்கள் இன்று கிளிநொச்சியில் போராட்டம்

*மாங்குளம் குறூப் நிருபர்*



தமது உறவுகளுக்கு நீதி வேண்டி கிளிநொச்சியில் இன்று இடம்பெறும் மாபெரும் போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, செயலாளர் பிரபாகரன் றஞ்சனா ஆகியோர் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் எங்களுக்கான தீர்வு என்ன என்பதை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்.

தொடர்ச்சியாக 13 ஆண்டுகளாக போராடி வருகின்றோம். கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் (12) ஆம் திகதி இன்று இரண்டாயிரம் நாட்களை கடக்கின்றது இதற்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும்.

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமை; 10வது நாள் போராட்டம் கிளிநொச்சியில்

*பரந்தன் குறூப் நிருபர்*



வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி 100 நாட்கள் கவனயீர்ப்பு போராட்டத்தின் 10வது நாள் போராட்டம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் குறித்த போராட்டம் நேற்று காலை 10 மணியளவில் இடம்பெற்றது,

முதலாம் திகதி மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. "கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' எனும் தொனிப்பொருளில், வடக்கு கிழக்கு உட்பட 8 மாவட்டங்களில் சுழற்சி முறையில் இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது,

நேற்றைய போராட்டத்தில் கிராம அடிப்படை அமைப்புக்கள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் மற்றும் மாணவர் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழ். கல்வியங்காடு, செங்குந்த சந்தை வியாபாரிகள் போராட்டம்

*யாழ். விசேட நிருபர்*



யாழ்ப்பாணம், கல்வியங்காடு, செங்குந்த சந்தை வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், யாழ்ப்பாணம் மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை மற்றும் கோப்பாய் பொலிஸார் ஆகியோருக்கு மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆளுகைக்கு உட்பட்ட செங்குந்தா சந்தையில் மரக்கறி வியாபாரத்தினை மேற்கொள்ளும் வியாபாரிகள் நேற்று காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சந்தைக்கு வெளியே, சந்தை சுற்று வட்ட பகுதிகளில் உள்ள பலசரக்கு கடைகளில் முன்னெடுக்கப்படும் மரக்கறி வியாபாரத்தை தடை செய்ய கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர். அது தொடர்பில் வியாபாரிகள் தெரிவிக்கையில்,

சந்தைக்கு வெளியே உள்ள பலசரக்கு கடைகளில் மரக்கறி வியாபாரம் நடைபெறுவதனால், சந்தைக்குள் வந்து மக்கள் மரக்கறியினை கொள்வனவு செய்யாமல், வீதியோரமாக இருக்கும் பலசரக்கு கடைகளில் மரக்கறியினை கொள்வனவு செய்து செல்கின்றனர். அதனால் சந்தையின் உள்ளே மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் எம்மிடம் மக்கள் வருவதில்லை. சில கடைகளில் சுகாதாரமின்றி மரக்கறிகளை கொட்டி விற்பனை செய்து வருகின்றனர் என்றனர்.

## அரச நிதி பற்றிய குழுவுக்கு உறுப்பினர்கள் நியமனம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரில் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (10) சபையில் அறிவித்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளுக்கமையவும் நேற்று (10) பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக கலாநிதி பந்துல குணவர்தன, விதுர விக்கிரமநாயக, நளின் பர்னாண்டோ, அநுர பிரியதர்ஷன யாபா, விஜித ஹேரத், துமிந்த திசாநாயக்க, செஹான் சேமசிங்க, பிரமித்த பண்டார தென்னகோன், கலாநிதி ஹர்ஷ த சில்வா, இந்திக அனுருத்த ஹேரத், சிறிபால கம்லத், டாக்டர் திருமதி சீதா அரம்பேபொல, கலாநிதி சுரேன் ராகவன், எம்.ஏ. சுமந்திரன், டாக்டர் காவிந்த ஹேஷான் ஜயவர்தன, முஜிபுர் ரஹுமான், ஹர்ஷண ராஜகருணா, சமிந்த விஜேசிறி, இசுரு தொடங்கொட, அனுப பஸ்குவல் மற்றும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அரசின் உதவியுடனான

## கிராம சக்தி வீட்டுத் திட்டங்களை விரைவாக ஆரம்பிக்குமாறு பணிப்பு

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தல்



இந்திய அரசின் உதவியுடன் நாட்டின் தெற்கு மற்றும் வட மாகாணங்களில் கிராம சக்தி வீட்டுத் திட்டங்களை விரைவுபடுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அதன்படி நாடுமுழுவதும் 1,800 வீடுகளின் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதற் கட்டத்தின் கீழ் தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 24 வீட்டுத் திட்டங்களும் மாத்தறை மாவட்டத்தில் 01 வீடமைப்புத் திட்டமும் காலி மாவட்டத்தில் 01 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 26 வீட்டுத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்திய அரசின் ஒப்பந்தத்தின்படி தென் மாகாணத்தில் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் 1,200 வீடுகளை நிர்மாணிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது

இதில் இப்போது 465 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 60 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தென் மாகாணத்தில் இந்த வீட்டுத் திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்டத்துக்கு இந்திய அரசின் ஒப்பந்தத்தின்படி 600 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொகையில் 271.3 மில்லியன் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வட மாகாணத்தில் 24 வீட்டுத் திட்டங்களில் மன்னார் மாவட்டத்தில் 06 வீட்டுத் திட்டங்கள், யாழ்ப்பாண மாவட்டத்தில் 04, வவுனியா மாவட்டத்தில் 04, கிளிநொச்சி மாவட்டத்தில் 04, முல்லைத்தீவு மாவட்டத்தில் 06 வீட்டுத்

05

## மின்சார சபை 61,200 கோடியை கடனாக செலுத்த வேண்டியுள்ளது

### வருமானத்தை விட செலவு அதிகமாகும்

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



மின்சார விநியோகஸ்தர்கள் மற்றும் அரச வங்கிகளுக்கு 61,200 கோடி ரூபாவை மின்சார சபை கடனாக வழங்கவேண்டியுள்ளதையடுத்தே தற்போது மின் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் நேற்று சபையில் கருத்து தெரிவித்த அவர், இவ்வருடத்தின் கடந்த 07 மாதங்களில் மின் உற்பத்திக்கான செலவு 3,300 கோடி ரூபாவாக உள்ளதுடன் 2000 கோடி ரூபாவை மட்டுமே மின்சார சபை வருமானமாகப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மின்சார சபை சுமார் 61,200 கோடி ரூபாவை மின் விநியோகஸ்தர்கள், மற்றும் மின் கொள்வனவுக்காக செலுத்த வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மின்சார சபையின் கோரிக்கைக்கமைய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதியுடனேயே மின்கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்கட்டண திருத்தத்தின் ஊடாக நிவாரணம் வழங்குவது தொடர்பிலும் திறைசேரியுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மின்உற்பத்தி நடவடிக்கைகளில் ஏற்படும் செலவுக்கும் கிடைக்கும் வருமானத்திற்குமிடையில் பாரிய வித்தியாசம் காணப்படுகிறது.

மின்சார சபை கடந்த ஆண்டு மின் உற்பத்திக்காக

05

தேர்தல் மற்றும் தேர்தல் கட்டமைப்பில் திருத்தங்கள்;

## பாராளுமன்ற சிறப்புக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்க இணக்கம்

### தேர்தல் ஆணைக்குழு – அரசியல் கட்சிகளின் சந்திப்பில் உடன்பாடு




தேர்தல் மற்றும் தேர்தல்களின் கட்டமைப்பில் திருத்தங்களை முன்மொழிய பாராளுமன்ற சிறப்புக் குழு அளித்துள்ள பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை அமுல்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுவான உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள முதல் தேர்தலுக்கான வாக்கெடுப்புக்கு முன்னர் அதன் பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்தவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில், தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துதல், முன்கூட்டியே வாக்களிக்கும் வாய்ப்புகளை வழங்குதல்

05



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி சங், நேற்று (10ஆம் திகதி) பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை சந்தித்து பேச்சு நடத்தினார். பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்குமிடையிலான சிநேகபூர்வ உறவுகள் குறித்தும் இருவரும் கலந்துரையடினர்.



இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் மைக்கேல் அப்பிள்டன், (09) வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியை அமைச்சில் சந்தித்து கலந்துரையடினார்.. இச்சந்திப்பின் போது இலங்கைக்கு நியூசிலாந்து அரசாங்கத்தின் தொடர்ச்சியான உதவிகள் பெற்றுக்கொடுப்பதை உயர் ஸ்தானிகர் ஆப்பிள்டன் உறுதிப்படுத்தினார்.

## இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் 500 பஸ்கள் கொள்வனவு

### பாடசாலை சேவைகளுக்கு மேலும் 80 பஸ்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் 500 பஸ் வண்டிகள் கொள்வனவு செய்யப்படும் என்றும் அதில் 250 பஸ்களை கிராமிய போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மின்சாரத்தில் இயங்கும் பஸ் வண்டிகளை பொது போக்குவரத்து சேவையில் இணைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்த அமைச்சர், 2030ஆம் ஆண்டு காலப்பகுதியில் 30 சதவீதமளவில் பொது போக்குவரத்து சேவையில் அதனை ஈடுபடுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள்

05

## பொது சொத்துக்கள் சட்டம் பாராளுமன்றினுள் செல்லுபடியாகுமா?

### எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகரிடம் கேள்வி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பொதுச் சொத்துக்கள் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டம் ஆகியன பாராளுமன்றத்துக்குள் செல்லுபடியாகின்றதா இல்லையா என்பதை சபாநாயகர் சபைக்கு தெளிவுபடுத்தவேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார்

பாராளுமன்றத்துக்குள் பொதுச்சொத்துக்கள் சட்டம் செல்லுபடியாவதில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ள கூற்றானது மக்கள் மத்தியில் தவறான புரிதலை ஏற்படுத்தியுள்ளதாக சபையில் குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர், அது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார்.

05





கதிர்காம முருகன் ஆடி மகோற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் நடைபெறும் நூல் படையல் வைபவத்தில் கலாபூஷணம் மாத்தளை பெ. வடிவேலன் எழுதிய 'காத்தருள் புரியும் கதிர்காம முருகன்' என்னும் கதிர்காம முருகன் மகிமையை உணர்த்தும் குறுநாடக நூல் முருகன் ஆலயத்திலும், தெய்வானையம்மன் ஆலயத்திலும் விசேட பூஜைகள் நடைபெற்று வெளியிட்டுவைக்கப்பட்டது. சமூக சேவையாளர் சுவாமிநாதன் கருப்பையா நூலின் சிறப்புப் பிரதியை வட்டவளை பிளாண்டேஷன் பணிப்பாளரும், சீப்ரஒப் கம்பனீஸ் விசுகோவிந்தசாமியிடம் வழங்குவதையும், பாதயாத்திரை குழுவினர் நூலாசிரியரிடமிருந்து சிறப்புப் பிரதிகளை பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

## முழு பாராளுமன்றமும் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட வேண்டும்

### சபையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



முழு பாராளுமன்றமும் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்டு அனைத்து நெருக்கடிகளுக்கும் தீர்வு காணும் வகையில் அனைவரும் இணைந்து செயல்படுவது அவசியமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

134 உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாகியுள்ள ரணில் விக்கிரமசிங்கவை தேர்தல் நடத்தப்பட்டால் எந்தவித சந்தேகமும் இன்றி அவரது தலைமைத்துவத்தை மக்கள் ஏற்றுக் கொள்வது உறுதி என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஜப்பான் ஜெய்க்கா நிறுவனத்தின் வேலைத்திட்டங்கள் இலங்கையில் நிறுத்தப்பட்டுள்ளதாக மேற்கொள்ளப்படும் விமர்சனங்களுக்கு சபையில் பதிலளித்த அமைச்சர்,

அந்த திட்டங்கள் நிறுத்தப்படவில்லை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென தெரிவித்த அமைச்சர் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் அந்தத் திட்டங்கள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும்உரையாற்றிய அமைச்சர்,

நாட்டில் நிலவிய எரிபொருள், சமையல் எரிவாயு ,உரம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறெனினும் கடந்த வருடம் முதல் எமது ஏற்றுமதி வருமானம் அதிகரித்து வருகிறது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் காலை வாருவதை விடுத்து அரசாங்கத்தை

05

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.75 | 258.80 |
| கனடியன் டொலர் | 275.14 | 288.28 |
| யூரோ | 363.14 | 378.40 |
| ஜப்பான் யென் | 2.6318 | 2.7436 |
| சிங்கப்பூர் டொலர் | 257.59 | 268.76 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 429.57 | 447.08 |
| சுவிஸ் பிராங்க் | 372.19 | 389.86 |
| அமெரிக்க டொலர் | 357.30 | 368.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 957.36 | கட்டார் ரியால் | 98.57 |
| குவைத் டினார் | 1,176.85 | சவூதி ரியால் | 95.99 |
| ஓமான் ரியால் | 937.49 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹம் | 98.26 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 26ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 12

### குறள் தரும் சிந்தனை



கடனறிந்து காலங் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை

ஆற்ற வேண்டிய கடமையை அறிந்து, அதற்குரிய காலத்தையும் இடத்தையும் தேர்ந்து, சொல்ல வேண்டியதைத் தெளிவாகச் சிந்தித்துச் சொல்பவனே சிறந்த தூதனாவான்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் துன்பங்கள் களையப்பட வேண்டும்

இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வழங்கி இருக்கின்றது. அதுதான் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாள் ஒன்றுக்கான அடிப்படைச் சம்பளமாக ரூபா 1000.00 ஐ நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானிக்கு எதிராக தாக்கல் செய்திருந்த எழுத்தாணை மனுவை (ரீட் மனு) தள்ளுபடி செய்து தீர்ப்பளித்து இருப்பதாகும்.

இந்த நாட்சம்பள அதிகரிப்பு வர்த்தமானிக்கு எதிராக 20 பெருந்தோட்டக் கம்பனிகள் இணைந்து 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி எழுத்தாணை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தன. இந்த மனுவின் அடிப்படையில் இவ்வர்த்தமானிக்கு பெருந்தோட்டக் கம்பனிகள் கோரிய இடைக்கால தடைஉத்தரவு மனு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் முதலில் நிராகரிக்கப்பட்டது. தற்போது இந்த வர்த்தமானிக்கு எதிராக பெருந்தோட்டக் கம்பனிகள் தாக்கல் செய்திருந்த எழுத்தாணை மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பு அளித்திருக்கின்றது மேன்முறையீட்டு நீதிமன்றம்.

இதன் ஊடாக தேயிலை, இறப்பர் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ரூபா 1000.00 ஐ நாட்சம்பளமாக வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத்தீர்ப்பின் ஊடாக தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது என்பதும் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை சரியானது என்பதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது பெருந்தோட்ட மக்களுக்கு மகிழ்ச்சியையும் புதிய நம்பிக்கையையும் அளிக்கும் தீர்ப்பு என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தம் நாட்சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென நல்லாட்சி அரசாங்க காலம் முதல் கோரிக்கை விடுத்து வந்தனர். இச்சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் எனப் பல நடவடிக்கைகளையும் தொழிலாளர்கள் முன்னெடுத்து வந்தனர். இச்சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பெருந்தோட்ட தொழிற்சங்கங்களுக்கும் துரைமார் சம்மேளனத்திற்கும் இடையில் பல மட்ட முயற்சிகளும் பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டன. இருந்தும் முதலாளிமார் சம்மேளனம் அவற்றுக்கு இணங்க மறுத்து வந்தது

இந்த நிலையில் 2021 இல் இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்ட அரசாங்கம் சம்பள நிர்ணய சபையின் ஊடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாப்படி நாட்சம்பளம் பெற்றுக்கொடுப்பதற்கான அதிவிஷேட வர்த்மானி அறிவித்தலை விடுத்தது. அந்த வர்த்தமானிக்கு எதிராகவே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இந்த ஆயிரம் ரூபா நாட்சம்பள கோரிக்கை இற்றைக்கு ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டதாகும். அன்றைய வாழ்க்கைச் செலவு நிலைமையை அடிப்படையாகக் கொண்டு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இக்கோரிக்கையை முன்வைத்திருந்தனர். அப்படியிருந்தும் 2021 வரையும் அக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்கோ, ஏற்றுக் கொள்வதற்கோ முதலாளிமார் சம்மேளனம் முன்வரவில்லை. இது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத செயற்பாடாகும்.

ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா நாட்சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்த காலப்பகுதியை விடவும் இன்று பல மடங்கு வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. இதற்கு நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி பெரிதும் பங்களித்து இருக்கின்றது. இதன் விளைவாக நாட்டின் எல்லாத் தரப்பினரையும் போன்று பெருந்தோட்டத் தரப்பினருக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு தாக்கமாகவும் அழுத்தமாகவும் அமைந்துள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை பெரிதும் வரவேற்றுள்ளனர். அதேநேரம் தற்போதைய சூழலில் ஆயிரம் ரூபா நாட்சம்பளம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கைச் செலவுக்குப் போதுமானதல்ல. அதனால் முதலாளிமார் சம்மேளனம் தற்போதைய பொருளாதார சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சம்பளம் மற்றும் கொடுப்பனவு தொடர்பில் நியாயமான முறையில் செயற்படத் தவறலாகாது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன் காரணத்தினால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையை நியாயக்கண் கொண்டு நோக்க முதலாளிமார் சம்மேளனம் முன்வர வேண்டும். தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்க்கை செலவு அதிகரிப்பு என்பவற்றை கருத்தில் கொண்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான சம்பளம் மற்றும் கொடுப்பனவு அதிகரிப்பை வழங்க முதலாளிமார் சம்மேளனம் முன்வர வேண்டும் என்பதுதான் எல்லா தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. அது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை செலவு சுமையைக் குறைக்க உதவுவதாகவும் அமையும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்த இராணுவத்தினருக்கு ஜனாதிபதி பாராட்டு

## இராணுவ தலைமையகத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இராணுவ மரியாதையுடன் செங்கம்பள வரவேற்பு



இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே விடுத்த அழைப்பின் பேரில் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது முதல் விஜயத்தை கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்திற்கு மேற்கொண்டார். அங்கு ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் கட்டடத்திற்கு முன்னால் காலை 9.00 மணியளவில் முப்படைகளின் சேனாதிபதி மற்றும் ஜனாதிபதி வாகன அணிவகுப்புக்கு மத்தியில் மரியாதை வழங்கப்பட்டது. இராணுவத் தலைமையகத்தின் பிரதான நுழைவாயிலிலும் மரியாதை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு முன்னர் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, ஜனாதிபதி அலுவல்கள் பிரதானி மற்றும் தேசிய பாதுகாப்பிற்கான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு பதவிநிலை பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவ பதவி நிலை பிரதானி, பிரதி இராணுவ பதவி நிலை பிரதானி மற்றும் பல சிரேஷ்ட அதிகாரிகள் ஜனாதிபதியை வரவேற்க அங்கு வந்திருந்தனர்.

கஜபா படையணியின் படையினரின் வண்ணமயமான மற்றும் நேர்த்தியான சீருடையிலான இராணுவத்தின் சிறப்பு அணிவகுப்பினை அணிவகுப்பு கட்டளையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க பரிசீலனை செய்த பின்னர் அன்றைய பிரதம அதிதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு இராணுவ மரபுகளுக்கு அமைய பாதுகாப்பு மரியாதை வழங்கப்பட்டது.

04 அதிகாரிகள், 100 சிப்பாய்கள் மற்றும் ஜனாதிபதி வர்ணம் மற்றும் படையணி வர்ண அணிகளுடன் கூடிய மிக உயர்ந்த இராணுவ மரியாதையினை ஜனாதிபதி பார்வையிட்டார்.

இராணுவ தலைமையகத்தின் பிரதான நுழைவாயிலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே இராணுவத் தலைமையகத்தின் பிரதான பணிநிலை அதிகாரிகளை அறிமுகம் செய்து வைத்தார்.

இராணுவத் தளபதியின் அலுவலகத்திக்கு வருகை தந்திருந்த முப்படைகளின் சேனாதிபதியும் இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகேயும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். இச்சந்திப்பில் 'இலங்கை இராணுவத்தின் முக்கியக் கோட்பாடுகள், கட்டளைகள், நடவடிக்கைகள், போர் மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றின் முதல் விபரங்களை வருகை தந்த ஜனாதிபதிக்கு வழங்குவதற்கான வாய்ப்பையும் இராணுவத் தளபதி பயன்படுத்திக் கொண்டார்.

இவ்விஜயத்திக்கு அதிக முக்கியத்துவம் அளித்து சில வாரங்களுக்கு முன்னர் இலங்கையின் ஜனநாயகம் மற்றும் இறையாண்மையின் உச்சமாக கருதப்படும் பாராளுமன்ற வளாகத்தை வன்முறைக் கும்பல் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர கடுமையாக முயற்சித்த போது, அந்த துரதிர்ஷ்டமான நாளில் தமது கடமைகளைச் செய்த இராணுவ படையினரின் பிரதிநிதிகள் குழுவை ஜனாதிபதி பாராட்டினார்.

வன்முறையாளர்கள் உள்ளே நுழைவதைத் தடுக்க முற்பட்ட போது கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய்கள் காயமடைந்தமையால் அவர்களில் சிலர் அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

வரவேற்பு உரைக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவர்கள் தமது உயிரைப் பணயம் வைத்து உரிய நேரத்தில் தலையீடு செய்ததை பாராட்டியதுடன், அந்த இராணுவ வீரர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். அவர் உரையாற்றுகையில் 'அன்றைய தினம் உங்களது செயற்பாடுகள் நாட்டின் அரசியலமைப்பு, ஜனநாயகம் மற்றும் இறையாண்மையைப் பாதுகாத்தன' எனக் குறிப்பிட்டார்.





லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே நிகழ்வின் இறுதியில் வருகை தந்திருந்த ஜனாதிபதிக்கு இராணுவத்தின் சார்பாக விசேட நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி நன்றியை வெளிப்படுத்தினார்.

நாட்டின் 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இராணுவத் தலைமையகத்தில் சிரேஷ்ட அதிகாரிகளுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் விருந்தினர் பதிவேட்டு புத்தகத்தில் பாராட்டுக் குறிப்பையும் பதிவு செய்தார்.

கப்டன் வா.சுதர்ஸ்சன்...
இராணுவ ஊடக பணிப்பகம், இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர

# மடுமாதா பெருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்கள் திருத்தலத்தின் புனிதத்தை பேணிக்காக்க வேண்டும்!

மன்னார் மடுமாதா திருத்தலத்துக்கு வருவோர் செபிக்கும் நோக்குடன் வருகை தந்து செபிப்பதன் மூலமாகவும், பயபக்தியுடன் வழிபாடுகளில் கலந்து கொள்வதனாலும் மருதமடு அன்னையின் இந்த ஆலயத்தின் புனிதத்துவத்தை தொடர்ந்து பேணிப் பாதுகாக்க ஏதுவாகும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.




மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வேண்டுகோள்

மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மடுத் திருப்பதியில் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்தைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. மடுத் திருப்பதியில் ஆவணி பெருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து ஆராயவே இக்கூட்டம் இங்கு இடம்பெற்றது.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மேலும் தெரிவித்ததாவது:



"தற்பொழுது இவ்விழாவை முன்னிட்டு 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வந்துள்ளனர். இங்கு அமைக்கப்பட்டிருக்கும் வீடுகள் பக்தர்கள் தங்குவதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் பல நூற்றுக்கணக்கான கூடாரங்கள் அமைத்து பலர் இங்கு தங்கியுள்ளனர். இவற்றுடன் மேலும் பெருந்தொகையான பக்தர்கள் வருகை தரவுள்ளதாக தெரியவந்துள்ளது.

11 ஆம் திகதி(இன்று) போயா தினமாக இருப்பதாலும், 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதாலும் மேலும் பலர் இங்கு வருகை தரவிருப்பதாக நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அத்துடன் இவ்வாறான ஒரு இடத்தில் மக்கள் ஒன்றுகூடும்போது நாங்கள் அவர்களின் ஆரோக்கியத்தையும் அவசியம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

இக்கூட்டத்தில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தது போன்று இச்சூழலில் முகக்கவசம் அவசியம் அணிய வேண்டும். முகக்கவசம் அணிவதன் மூலம் எம்மையும் பாதுகாத்து மற்றவர்களையும் பாதுகாக்க ஏதுவாகும்.

அத்துடன் நாம் மடுத்திருப்திக்கு வருவது செபிப்பதற்காக ஆகும். நாம் கலந்து கொள்ளும் வழிபாட்டில் பக்தியுடன் ஈடுபடுவதால் இத்திருத்தலத்தில் ஒரு புனிதத்துவம் ஏற்படுகின்றது. பக்தர்கள் பலர் இவ்விழாவில் கலந்து கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதால், மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்து கொண்டே ஆவணி திருவிழாத் திருப்பலியை ஆவணி 15 ஆம் திகதி காலை 6.15 மணியிலிருந்து நேரலையாக தொலைக்காட்சியில் காண முடியும்".

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

வாஸ் கூஞ்ஞ...
(தலைமன்னார் விஷேட நிருபர்)

# கொட்டகலையில் சாரல்நாடனின் எட்டாவது நினைவுதின நிகழ்வு

கொவிட் தொற்று காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக அனுஷ்டிக்கப்படாத சாரல்நாடன் நினைவேந்தல் நிகழ்வு கடந்த ஜூலை 31 அன்று கொட்டகலை தமிழ் மகாவித்தியாலத்தில் நடத்தப்பட்டது. எட்டாவது நினைவு தின நிகழ்வில் முக்கிய அம்சமாக மு. நித்தியானந்தன் எழுதிய முன்னுரையுடன் மலையக பதிப்பாளர் எச். எச். விக்ரமசிங்கவின் முயற்சியினால் தமிழகத்தில் பதிப்பிக்கப்பட்ட சாரல் நாடன் எழுதிய 'வானம் சிவந்த நாட்கள்' எனும் நாவல் இலங்கையில் முதன் முதலாக வெளியீடு செய்யப்பட்டது.

தினேஷ் எழுதிய கவிதாஞ்சலி அவரின் தாயாரால் வாசிக்கப்பட்டு நிகழ்ச்சி ஆரம்பமானது.

தலைமை வகித்த கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளரும் இலக்கியவாதியுமான சு.முரளிதரன் உரையாற்றுகையில் இந்த நாவல் ஒரு வரலாற்று நாவலாக அமைவதோடு, இந்த நாவல் வெளியீடும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றார்.

"லண்டனில் நடைபெற்ற மலையக இலக்கிய மாநாட்டில் இந்த நாவல் வெளியிடப்பட்டதோடு, சாரல்நாடன் என்ற பெயரில் ஓர் அரங்கம் நடத்தப்பட்டமை அவருக்குக் கிடைத்த மிக உயர்ந்த கௌரவமாகும்" எனவும் அவர் தெரிவித்தார்.

"இந்த மாபெரும் கௌரவத்தை வழங்கிய மலையக இலக்கிய செயற்பாட்டாளர்களான மு. நித்தியானந்தன் மற்றும் எச். எச். விக்ரமசிங்க ஆகியோருக்கு மலையக இலக்கிய உலகு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றது" என்றும் அவர் குறிப்பிட்டார்.




நாவல் பற்றிய பார்வையினை பதிவு செய்த சு. தவச்செல்வம், இந்த நாவல் மூலம் சாரல்நாடன் எவ்வாறு தொழிலாளர்களை நேசிக்கும் ஒருவராக விளங்கினார் என்பது புரிகின்றது எனக் குறிப்பிட்டார்.

'சாரல்நாடன் மலையகத்தின் ஒரு சகாப்தம்' எனும் தலைப்பிலான நினைவேந்தல் உரைகளில் முதலாவதாக அவருடைய பாடசாலை நண்பரான சாகித்யரத்னா மு.சிவலிங்கம், ஹைலண்டஸ் கல்லூரியில் கற்கும் போது சாரல்நாடன் எவ்வாறு கலை இலக்கிய செயற்பாடுகளில் அக்கறை கொண்டிருந்தார் என விபரித்ததோடு, 24 நூல்களை படைத்த சாரல்நாடனின் வெற்றிக்கு அவரின் துணைவியார் வழங்கிய பங்களிப்பைப் போற்றினார்.

கலாபூசணம் மொழிவரதன், சாரல்நாடன் எவ்வாறு மலையக இலக்கியத்துக்கு பங்களித்ததோடு தனது நூல்களும் வெளிவருவதற்கு எவ்வாறு ஒத்துழைத்தார் எனக் குறிப்பிட்டார்.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் முன்னாள் துணைப்பீடாதிபதி வ. செல்வராசா, சி.வி.வேலுப்பிள்ளை அவர்களை வெகுஜனப்படுத்துவதில் சாரல்நாடன் ஆற்றிய பணியை பாராட்டினார். கொட்டகலை ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ஜெ.சற்குருநாதன் சாரல் நாடனின் பதிப்பு முயற்சிகள் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி முன்னாள் பீடாதிபதி சிவ ராஜேந்திரன், சாரல்நாடனோடு பழகிய நாட்களை நினைவு கூர்ந்தார்.

சிவனு மனோகரன், எவ்வாறு தனது ஆரம்ப கால சிறுகதைகள் வெளிவந்த போது சாரல்நாடன் அதனை வாசித்து தனிப்பட்ட ரீதியில் கடிதம் எழுதி கதைகள் குறித்து மதிப்பீடு செய்து ஊக்குவித்தார் என்று தெரிவித்தார்.



கொட்டகலை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அகிலன், தமிழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவர் பெருமாள் சரவணக்குமார், நடேசய்யர் 1915 ஆம் ஆண்டு எழுதிய 'ஒற்றன்' நாவலை பதிப்பித்து அதனை சாரல்நாடனுக்கு சமர்ப்பணம் செய்து அவருக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதை பதிவு செய்தார்.

பத்தனை டேவிட் நூல்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்ததோடு சாரல்நாடனின் நூல்கள் எப்போதும் உசாத்துணைகளாக பயன்படுத்த வல்லன என்றார்.

சுதர்மமகாராஜன் பேசுகையில் தமது பெருவிரல் இயக்கம் மாணவர்களிடையேயும் இளைஞர்களிடையேயும் நல்ல வாசிப்பு பழக்கத்தை முன்னெடுக்க பணி செய்த போது அதில் சாரல் நாடனின் புலமைத்துவ வழிகாட்டல் பங்களிப்பு செய்தது பற்றிக் குறிப்பிட்டார்.

கணேசலிங்கம் பேசுகையில், சாரல்நாடன் தன்னை எப்படி ஒரு ஆய்வாளனாக நிலைமாற்றம் செய்ய அனுசரணை செய்தார் என்பதை கூறி அவரின் நூல்கள் மலையக ஆய்வுகளுக்கு துணைக்கரமாகுமென்றார். ஜீவகுமாரி தனது நன்றியுரையில், இந்த நாவலை எனது தந்தையார் இறந்து 8 ஆண்டுகளுக்குப் பின்னர் கேட்டு வாங்கி தனது சொந்தச் செலவில் பிரசுரித்த அன்புச் சகோதரர் எச். எச். விக்ரமசிங்க அவர்களுக்கும், காத்திரமான முன்னுரை எழுதிய மு. நித்தியானந்தன் அவர்களுக்கும், தெளிவத்தை ஜோசப் மற்றும் அட்டைப்படத்தை வரைந்து உதவிய ஓவியர் லண்டன் கே. கே. ராஜா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்தார்.

ஜீவகுமாரியின் நன்றியுரையோடு நிகழ்வு முடிவடைந்தது. மு.சிவலிங்கம் மற்றும் சு.முரளிதரன் ஆகிய இருவரின் வழிகாட்டலின் கீழ் சாரல்நாடன் கீர்த்தியை முன்னெடுக்க செயற்குழு அமைக்கப்பட்டது.



எச்.எச்.விக்ரமசிங்க...
பதிப்பாசிரியர்

## ஜனாதிபதி ரணில் மீது...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற வரலாற்றில் ஜனாதிபதியொருவரின் உரைக்கு அதிகளவில் வரவேற்பளிக்கப்பட்ட உரையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையைக் குறிப்பிட முடியும்.

கோட்டாபய ராஜபக்ஷவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னர் ஜனாதிபதியாக பதவி வகித்தார். அதன்போது அவர் தவறவிட்டவை மற்றும், ரணில் விக்கிரமசிங்க புரிந்துகொண்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ நெருக்கடிகளை சரியாக அடையாளம் காண தவறிவிட்டார். அதேபோன்று நெருக்கடிக்கு குறுகிய கால மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்களும் அவரிடம் இருக்கவில்லை.

2019 இல் இருந்தே புதியவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்ற போராட்டம் ஆரம்பமாகியது. அதன்படி அவர்கள் எதிர்பார்ப்புகளுடன் வீதிகளில் சித்திரங்களை வரைந்தனர்.

அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறாத பட்சத்திலேயே போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏப்ரல் 09 ஆம் திகதி போராட்டம் இவ்வாறான நெருக்கடியுடனேயே ஆரம்பமாகியது.

போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை. இப்போது மக்களுக்கு போராட்டங்கள் போதும் என்ற நிலை வந்து விட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மீது மக்கள் புதிய எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறாவிட்டால் மீண்டும் போராட்டங்கள் தொடரலாம். நான் இன்னும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினராகவே உள்ளேன்.

இன்னும் எனது அலுவலகத்தில் சஜித் பிரேமதாசவின் புகைப்படத்தைக் கூட அகற்றவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதையே நான் விரும்புகின்றேனென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மஹிந்த, பசில் மீதான...

நீதிமன்ற அமர்வு நேற்று பிற்பகல் இடம்பெற்றபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், டபிள்யூ.டி.லக்ஷ்மன் மற்றும் திறைசேரியின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோருக்கு சர்வதேச பயணத்தடை விதிக்குமாறு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன உள்ளிட்ட பல தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு இக்குழுவே காரணம் என கூறப்பட்டுள்ளது.

## பதுக்கி வைக்கப்பட்டிருந்த 19,000...

செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக நேற்றுமுன்தினம் இரவு இந்த விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்திலிருந்து அம்பாறை பிரதேசத்துக்கு எடுத்துச் செல்வதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 19,000 லீற்றர் டீசல் இதன்போது மீட்கப்பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் ஹம்பாந்தோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து ஹம்பாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சுங்க அதிகாரிகளிடம் சிக்கிய...

முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த இலங்கை தம்பதியினர் நேற்றுமுன்தினம் மாலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டனர்.

அந்த தம்பதியினர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர். அவர்கள் இருவரும் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் ஓமானின் மஸ்கட்டில் இருந்து விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் அணிந்திருந்த ஆடைகளுக்கு இடையே நகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பஸ்களில் அதிக கட்டணம்...

நிலான் மிராண்டா தெரிவித்தார். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளையடுத்து இந்த சோதனை நடத்தப்பட்டது என அவர் குறிப்பிட்டார். எனவே, மாகாண பேருந்துகளில் சோதனையிடுவதற்கு அனைத்து நடமாடும் சோதனை அதிகாரிகளை ஈடுபடுத்துமாறு பயணிகள் போக்குவரத்து அதிகாரிகளுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. மேலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைக்கப்பட்டுள்ள பல நடமாடும் சோதனை அதிகாரிகள் சோதனைகளில் ஈடுபட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். அபராதம் விதிக்கப்பட்டு, சம்பவங்களில் ஈடுபட்ட சில பேருந்து உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பயணிகளிடமிருந்து வசூலிக்கப்படும் கூடுதல் தொகையை திருப்பிச் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் நிலான் மிரண்டா கூறினார்.

## 19ஆம் திகதி முதல் வழமை போன்று...

தெரிவித்தார். மசகு எண்ணெய்யுடன் கப்பல் எதிர்வரும் 13 ஆம் திகதி நாட்டை வந்தடைந்ததும் 15 ஆம் திகதி முதல் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகுமென சபையில் தெரிவித்த அமைச்சர், எதிர்வரும் ஆகஸ்ட் 19ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதால் கடற்றொழிலாளர்கள் மற்றும் கைத்தொழில் துறையில் குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும் கடந்த வாரங்களில் புத்தளம்,தங்காலை,கிரிந்திவெல ஆகிய பகுதிகளில் கடற்றொழிலாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது. கடற்தொழிலாளர்கள், குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற காரணத்தினால் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 87 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.ஒரு சில பஸ் உரிமையாளர்கள் டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெய்யைப் பயன்படுத்துகின்றார்கள். தொடர்ந்தும் அதற்கு இடமளிக்க முடியாது.

நாங்கள் தொடர்ந்தும் பழைய விலையில் மண்ணெண்ணெய் விநியோகிக்க முடியாது. மண்ணெண்ணெய் விலையில் திருத்தம் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அதன் போது கடற்றொழிலாளர்கள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையினருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் சேவையாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தொடர்ச்சியாக நடைபெற்ற எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் போது மேலதிக கடமைகளை மேற்கொண்டோருக்கே மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. அது தவிர்க்க முடியாதது. முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களுக்கு பதில் வழங்கும் வகையில் உண்மையான நிலை தொடர்பில் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மனுக்களை மீளப்பெற்ற...

ஆர்ப்பாட்டக்காரர்கள் நால்வர் தாக்கல் செய்திருந்த நான்கு ரிட் மனுக்களை நேற்று (10) ஆர்ப்பாட்டக்காரர்கள் மீளப்பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணிகளான எம்.ஏ சுமந்திரன் மற்றும் சாலிய பீரிஸ் உள்ளிட்ட சட்டத்தரணிகள், தமது தரப்பினர் காலி முகத்திடல் பிரதேசத்தை விட்டு வெளியேற தீர்மானித்துள்ளதாக நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

## மோதிரங்களை களவாடிய...

பாராளுமன்ற உறுப்பினர் அணிந்திருந்த இரண்டு தங்க மோதிரங்கள் திருடப்பட்டமை மற்றும் மீகஹகிவுல உள்ளூராட்சி சபைத் தலைவரின் கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் நிட்டம்புவ, ரன்பொகுணகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் திருடப்பட்ட கைத்தொலைபேசி சந்தேகநபரிடம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அதோடு தாக்குதலின் போது பாராளுமன்ற உறுப்பினர் அணிந்திருந்த மற்றுமொரு தங்க மோதிரத்தை திருடிய சந்தேக நபர் ஒருவர் நிட்டம்புவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர்கள் 30 மற்றும் 38 வயதுடைய நிட்டம்புவ மற்றும் ரன்பொகுனுகம பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் நேற்று முன்தினம் அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## இணைந்து செயற்பட முன்வருமாறு...

பேச்சு வார்த்தைகளில் இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் ,நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்;

சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் அனைத்து கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பாராளுமன்ற தெரிவுக் குழுக்களை பலப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் நிலையியற் கட்டளையில் மாற்றம் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை, பாராளுமன்றம் மற்றும் பொது மக்களுக்கிடையிலான இடைவெளியை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் கருத்துகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். எனினும் வன்முறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாம் எதிர்காலம் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக நாட்டின் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள் அவசியமாகும். அதற்கான நீண்ட கால தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அதில் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கான இணக்கப்பாடும் காணப்பட்டுள்ளது. நம்பிக்கை என்ற பாரிய ஆயுதத்துடன் அரசாங்க நிர்வாகம் தொடர்பில் கவனம் செலுத்தி வரும் இந்த காலகட்டத்தில் பாராளுமன்றமானது புதிய எதிர்பார்ப்புடன் உள்ள இளைஞர்கள் எதிர்பார்க்கும் மாற்றத்திற்கு ஏற்ப செயல்படுவது அவசியம். நாட்டில் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு அனைவரும் இணைந்து செயல்படுவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜெனீவா கூட்டத் தொடருக்கு...

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (09) நீதி அமைச்சில் இது தொடர்பான விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

மனித உரிமைகள் நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை கையாளும் தேசிய நிறுவனங்களின் நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் இவ் விசேட கலந்துரையாடலில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் கலந்துகொண்டார்.

மனித உரிமைகளை பாதுகாப்பது, நல்லெண்ணத்தை உருவாக்குவது மற்றும் கட்டியெழுப்புவது தொடர்பாக அந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பாக இங்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டதோடு எதிர்காலத்தில் அந்நிறுவனம் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடருக்கு இது தொடர்பான அனைத்து நிறுவனங்களும் எவ்வாறு முகம் கொடுப்பது என்பதற்கான பொறிமுறையொன்றை தயாரிக்கவும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

## அரசியலமைப்பின் 22 வது...

அரசியலமைப்பு திருத்த யோசனையை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே முன்வைத்திருந்த நிலையில் அது நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு நீதிமன்றம் அதில் அதிகமான சரத்துக்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என தெரிவித்ததையடுத்து அரசாங்கத்தினால் 22 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்ட மூலம் முன்வைக்கப்பட்டு நேற்று அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நீதிமன்றமானது அது தொடர்பான தமது தீர்ப்பில் 21 ஆவது அரசியலமைப்பு திருத்த யோசனையை செயற்படுத்த தடைகள் உள்ளதாகவும் அவற்றில் அநேகமான சரத்துக்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தது டன் அந்த நிலையிலேயே 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அரசாங்கம் முன்வைத்தது.

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்திற்கான ஆரம்ப வரைவுக்கு, ஏற்கனவே 2022.06.20 அன்று அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்படி 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் சட்ட வரைவாளர்களால் தயாரிக்கப்பட்டது. அதற்கிணங்க மேற்படி சட்டமூலம் சட்டமூலம் அரசியலமைப்பிற்கு உட்பட்டது என சட்டமா அதிபரும் அதற்கான பரிந்துரையை வழங்கியிருந்தார்.

அதனையடுத்து, 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன் பின்னர் அதனை பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்சவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இத்தகைய பின்னணியிலேயே அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதேவேளை, 22 வது அரசியலமைப்பு திருத்தமானது 19 ஆவது திருத்தத்தை இரத்து செய்ததன் பின்னர் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வழங்கிய அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்து செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுவதுடன் 22 இன் கீழ், ஜனாதிபதி, அமைச்சரவை, தேசிய சபை, பதினைந்து குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்களும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்திற்கான முன்மொழிவுகள் ஜூன் 29, 2022 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டன.

அமைச்சர்களை நியமிக்கும் மற்றும் நீக்கும் அதிகாரத்தை ஜனாதிபதியிடம் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவினால் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் சேர்க்கப்பட்ட இடைக்கால விதிகள், புதிய திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார கட்டண அதிகரிப்பு...

மின்சார கதிரையில் ஏற்றப்போவதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது மின்சார கட்டணத்தை அதிகரித்து நாட்டு மக்களை மின்சார கதிரையில் ஏற்றியுள்ளதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி சபையில் உரையாற்றிய அவர் அது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

மின்சார கட்டணத்தை நூற்றுக்கு 75வீதம் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் அது நூற்றுக்கும் அதிகமான வீத அதிகரிப்பைக் கொண்டுள்ளது. மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இச் சந்தர்ப்பத்தில் இந்தளவு பாரிய தொகை மின் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டால் மக்கள் எவ்வாறு வாழ்க்கையை கொண்டு செல்வது? அந்த வகையில் அதிகரிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்துவதற்கு சபை அனுமதி வழங்க வேண்டும். அதற்கிணங்க விவாதம் முடியும் வரை மின்சார கட்டண அதிகரிப்பை இடைநிறுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த மின் சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர அதற்குப்பதிலளிக்கையில், மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது ஆனால் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்த வகையில் அதுதொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கும் தயார் என்றார். அதனைத்தொடர்ந்து கருத்து தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அதற்குப் பதிலளிக்கும் வகையில் அதுதொடர்பான விவாதம் ஒன்றை நடத்துவது தொடர்பில் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

## 103 சீன பிரஜைகளுக்கு...

அவர்கள் கடந்த 10 நாட்களுக்குள் நாட்டுக்கு வந்தவர்களாவர் எனத் தகவல்கள் தெரிவிப்பதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிட்டுள்ளார். எனினும், அவர்கள் இதுவரையில், பிரதேச பொது சுகாதார பரிசோதகருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்றும் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

## தபால் கட்டணங்கள்...

குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் 250 கிராம் எடையுள்ள பொருட்களுக்கான சரக்கு கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் பல தபால் கட்டணங்களின் விலை குறைக்கப்படும் எனவும், இந்த கட்டணங்கள் இன்று அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய கூட்டணியின் பெயர்...

தெரிவித்துள்ளார். அந்த கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, சர்வகட்சி அரசாங்கம் அமைச்சுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் அல்ல, மாறாக இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து அனைவரும் வெளியேறக்கூடிய ஒரு திட்டத்தை அமைப்பதன் மூலம் உருவாக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

## தனியார் பஸ் உரிமையாளர்கள் NTC...

நடத்தி ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு கடமையை செய்வதற்கு தடையை ஏற்படுத்திய தனியார் பஸ் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர். பிரேமசிறிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## கிராம சக்தி வீட்டுத்... (03 ஆம் பக்கத் தொடர்)

திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் 24 வீட்டுத் திட்டங்களில் 600 வீடுகள் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 371 வீடுகளுக்கான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்காக இந்திய அரசு 300 மில்லியன் ரூபா உதவித் தொகையை வழங்குகிறது. அந்த தொகையில் இருந்து 1,24.6 மில்லியன் ரூபா பணம் பெறப்பட்டது. இங்கு ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு பயனாளிக்கு 05 இலட்சம் ரூபா உதவித் தொகை மற்றும் திறைசேரியினூடான கொடுப்பனவாக ஒரு இலட்சம் ரூபாவும் மீள செலுத்தப்படாத கொடுப்பனவாக வழங்கப்படுமென்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

## மின்சார சபை 61,200... (03 ஆம் பக்கத் தொடர்)

2,460 கோடிரூபா நிதியை செலவழித்துள்ளதுடன்,மின் விநியோகத்தின் ஊடாக 2170 கோடி ரூபாவையே பெற்றுக்கொண்டுள்ளது. பல்வேறு காரணங்களினால் மின்சார சபை தொடர்ந்தும் நட்டத்தை எதிர் கொண்டுள்ளது. தனியார் மின்நிலையங்கள்,அரச வங்கிகள்,மின் விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கு 61,200 கோடி ரூபாவை மீளச் செலுத்த வேண்டியுள்ளது.மின்சார சபையின் நிதி நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய வேண்டுமாயின் மின்கட்டணத்தில் திருத்தம் மேற்கோள்வது தவிர்க்க முடியாததாகும்.

மின்கட்டணத்தை அதிகரிக்காமல் இலங்கை மின்சார சபையின் நிதி நெருக்கடியை முகாமைத்துவம் செய்யும் ஏதேனும் திட்டங்கள் இருக்குமானால் எதிர்தரப்பினர் அதனை தாராளமாக முன்வைக்கலாமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாராளுமன்ற ... (03 ஆம் பக்கத் தொடர்)

மற்றும் வாக்கெடுப்பு நாளில் விசேட வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல், மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

தேர்தல் காலத்தில் அனைத்து ஊடகங்களுக்கும் ஊடக உபநடவடிக்கைகளை அமுல்படுத்துவது அந்த பரிந்துரைகளில் ஒன்றாகும். மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகளின் உறுப்பினர்களி ன் பதவிக் காலம் முடியும் வரை தேர்தல் ஆணைக் குழு வெளியிடும் நெறிமுறைகள் செல்லுபடியாகும் என்றும் அதற்கு சட்டப்பூர்வ அதிகாரம் வழங்குவதும் அதில் அடங்கும்.

## இந்திய கடனுதவித் ... (03 ஆம் பக்கத் தொடர்)

முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் 500 பஸ் வண்டிகளை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்று பொது போக்குவரத்து சேவை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## பொது சொத்துக்கள் சட்டம்... (03 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி அது தொடர்பில் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் மேலும் தெரிவிக்கையில்:

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென சில சிறப்புரிமைகள் உள்ளன. அந்த வகையில் பொதுச்சொத்துக்கள் சட்டம் பாராளுமன்றத்திற்குள் செல்லுபடியாவதில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

52 நாள் அரசாங்க காலத்தில் சபைக்குள் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சரவைப் பேச்சாளர் பதிலளிக்கையில், அது பொதுச்சொத்துக்கள் சட்டத்துடன் சம்பந்தப்பட்டது. அதுதொடர்பில் சபாநாயகரே தீர்மானிப்பார் என குறிப்பிட்டிருந்தார்.

இந்த பதில், பாராளுமன்றத்துக்குள் ஒரு சட்டம் பாராளுமன்றத்துக்கு வெளியில் ஒரு சட்டம் என மக்கள் மத்தியில் தவறான புரிதலை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதனால் பொதுச் சொத்துக்கள் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டம் ஆகிய சட்டங்கள் பாராளுமன்றத்துக்குள் செல்லுபடியாவதில்லையா என்பதை சபாநாயகர் தெளிவுபடுத்தவேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அதனைத்தொடர்ந்து குறுக்கிட்ட முஜிபுர் ரஹ்மான் எம் பி: அமைச்சர் பந்துல குணவர்தனவின் இந்த கூற்று, பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மக்களின் கோபத்தை தூண்டும் நடவடிக்கையாகும் என குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களும் நாட்டின் சட்டத்துக்கு உட்பட்டவர்கள். பொதுச்சொத்துக்கள் சட்டம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு செல்லுபடியானது. பாராளுமன்றத்தில் 52நாள் அரசாங்கத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் விசாரணை நடத்த அன்று சபாநாயகராக இருந்த கருஜயசூரிய குழுவொன்றை அமைத்திருந்தார்.

அந்த விசாரணை அறிக்கையின்படி 5பேர் தவறு செய்தவர்களாக இனம் காணப்பட்டனர். அத்துடன் அன்று இடம்பெற்ற சம்பவங்கள் காரணமாக பாராளுமன்றத்துக்கு ஒருஇலட்சத்து 30ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் அமைச்சர் பந்துல குணவர்தனவின் கூற்று மக்கள் மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது கோபத்தையே ஏற்படுத்தும். விடயங்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய ஒருவரை பேச்சாளராக அரசாங்கம் நியமிக்கவேண்டும் என்றார்.

அதற்கு தேவையான விளக்கத்தை அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் வழங்கினார்.

## முழு பாராளுமன்றமும்... (03 ஆம் பக்கத் தொடர்)

பலப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

தவறுகள் இருப்பின் அவை சுட்டிக்காட்டப்பட்டு அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டிய தருணம் இது. அதற்காகவே சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மூலம் தமக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் மீளப்பெற்று பாராளுமன்றத்திற்கு அதனை வழங்கவும் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அவ்வாறான ஒரு நேர்மையான தலைவர் அவர். இந்த அரசாங்கத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல போதிய பலத்தை அவருக்கு பெற்றுக் கொடுப்பது முக்கியமாகும்.

தற்போது அரசாங்கத்துக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவும் கிடைத்து வருகிறது. தெரிவுக் குழுவின் தலைவராக பதவி ஏற்பதற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேநீர் விருந்துபசார செலவை...

தினம் தேநீர் விருந்துக்கு செலவிடப்பட்ட 2,72,000 ரூபா ஜனாதிபதியின் தனிப்பட்ட பணத்திலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. இக்கட்டான காலப்பகுதியில் அரசாங்கச் செலவுகள் குறைந்தபட்சமாக இருக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்திற்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## சிறுவர்களுக்கான பாரிய இருதய சத்திர சிகிச்சை வைத்தியசாலை; மட்டக்களப்பு கிரான்குளத்தில் திறப்பு






**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

நாட்டில் பிறப்பிலிருந்தே இருதய நோயினால் பாதிப்புக்குள்ளாகும் சுமார் 1500 சிறார்களின் இருதய நோய்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் பாரிய சிகிச்சை நிலையம் ஒன்று மட்டக்களப்பு கிரான்குளத்தில் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவின் ஸ்ரீ சத்யசாய்பாபா பவுண்டேஷன் இலங்கை சுகாதார அமைச்சுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தச் சிறுவர் இருதய சத்திர சிகிச்சை நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரியும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மருமகளுமான பிரிய ஜயவர்தனவின் முன்னெடுப்பில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. குறித்த சத்திர சிகிச்சைக் கூடத்தினை பகவான் சத்ய சாய் பாபாவின் சீடர் சுவாமி சத்குரு ஸ்ரீ மதுசுதன்சாய் வைபவ ரீதியாக நேற்று திறந்து வைத்தார்

ஐக்கிய இராஜ்யத்தின் பிர்மிங்காம் நகரில் செயல்படும் பிரபல வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் குழுவே இந்த சிறுவர் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது இலங்கையில் பிறப்பிலேயே சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் இருதய நோய்க்குள் ளாகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த வைத்தியசாலையில் ஏற்கனவே வெளிநோயாளர் பிரிவில் வைத்திய சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கதிர்காமம் உற்சவம் இன்று; காட்டுப் பாதை மூடப்பட்டது

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்திற்கான தீர்த்தம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அதை ஒட்டிய இறுதி மகா பெரஹரா இன்று வியாழக்கிழமை இரவு கோலாகலமாக நடைபெறும்.

கடந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கடந்த 15 நாட்களாக பெரஹரா ஊர்வலம் நடைபெற்று வந்தது.

இதேவேளை, கதிர்காம காட்டுப் பாதை மூடப்பட்டுள்ளது. கடந்த யூலை மாதம் 22 ஆம் திகதி திறக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மூடப்பட்டது. இம்முறை 29 ஆயிரத்து 694 பேர் காட்டுப் பாதையால் பயணித்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் பல சோதனைகளையும் துன்பங்களையும் சந்தித்து அவர்கள் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.



சமுர்த்தி வீட்டு லொத்தர் வெற்றியாளர்களுக்கான ரூபா 2,00,000/ காசோலை வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. அட்டாளைச்சேனை பிரதேச உதவி பிரதேச செயலாளர் எப். நஹீஜா முஸாபிர் காசோலைகளை வழங்கி வைத்தார். படம்: திராய்க்கேணி நிருபர்

## கந்தளாயில் நாலாம் கட்ட கொரோனா தடுப்பூசி

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதியில் நான்காம் கட்ட கொரோனா தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் நடைபெற்றன.

இதன் போது பைசர் தடுப்பூசிகள் ஏற்றப்படுவதாக பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன் போது பாடசாலை மாணவர்கள்,வயதானவர்கள், ஏற்கனவே கொரோனா தடுப்பூசி செலுத்தாதவர்கள் மற்றும் ஆண்கள்,பெண்கள் எனப் பலருக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

## கிழக்கு மாகாண சுகாதார கழிவுகளை சீரான முறையில் அகற்ற நடவடிக்கை

### கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ்

**ஒலுவில் விசேட நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் சுகாதார கழிவுகளை சீரான முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல். எம்.றிபாஸ் தெரிவித்தார்.

வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் பல நவீன இயந்திரங்களை பொருத்தி சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் சுகாதார கழிவுகளை அகற்றுவதற்கான திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதார கழிவு அகற்றும் திட்டத்திற்கு யூ.என்.டி.பி நிறுவனம் அனுசரணை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் கழிவுகளை எவ்வாறு அகற்றுவது என்பது தொடர்பாக சுகாதார அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு திட்டமுன்மொழிவுகள் வரையப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

விரைவில் சுகாதார கழிவுகள் அகற்றும் திட்டம் சகல வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதார நிலையங்களிலும் கிரமமான முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் சூழலுக்கு எவ்வகையான பாதிப்பும் ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

## பாலமுனையில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு

**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**

பாலமுனை வயல் மற்றும் குடியிருப்பு பிரதேசங்களில் நாளாந்தம் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பதால் மக்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தற்பொழுது நெல் அறுவடை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் காலை வேளைகளில் தமது விவசாய நிலங்களுக்கு செல்லமுடியாதவாறு வயல் நிலங்கள் முழுவதையுமே காட்டு யானைகள் ஆக்கிரமித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் வயல் நிலங்களுக்குள் உட்பிரவேசிக்கும் காட்டு யானைகள் விவசாயிகள் இளைப்பாறுவதற்காக அமைத்துள்ள ஓய்வு அரண்களையும் வயல் ஓரங்களில் காணப்படும் தென்னை மற்றும் நிழல் தரும் மரங்களையும் அழித்து துவம்சம் செய்து வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.



காட்டு யானைகளின் தொல்லையினாலும் அச்சத்தினாலும் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இரவு வேளைகளில் வீடுகளில் நிம்மதியாக உறங்குவதற்கும் முடியாதுள்ளது.

காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாயிகளும் பொது மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மட்டு. போதனா வைத்தியசாலையில் கொரோனாவால் ஒருவர் மரணம்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**


மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நீண்ட நாட்களின் பின்பு தற்போது பரவி வரும் கொவிட் 19 தொற்றின் தாக்கம் காரணமாக வயோதிபர் ஒருவர் நேற்று (10) மரணமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த நபர் மட்டக்களப்பு விக்டோரியா லேனைச் சேர்ந்த மாசிலாமணி (83) என அடையாளங்காணப்பட்டதோடு இவர் கடந்த திங்கட்கிழமை (08) நீரிழிவு நோய் காரணமாக விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்தபோது அவரை கொவிட் 19 தொற்றுப் பரிசோதனைக்குட்படுத்திபோது தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட்19 தொற்றுக்குள்ளாகி மரணமடைந்ததால் சடலத்தை புதைப்பதற்கான நடவடிக்கைகள் வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு வருவோர் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து கட்டாயம் முகக் கவசம் அணிந்து வருமாறு பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடி சிறுமி ஆசிய சாதனை புத்தகத்தில்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி மில்லத் மகளிர் உயர்தர பாடசாலையில் தரம் 01 இல் கல்வி கற்று வரும் மாணவி பாத்திமா ஸப்னம் இமாரா 30 வினாடிகளில் 47 வகையான பூச்சிகளின் பெயரை அசுர வேகத்தில் கூறி சாதனை புரிந்து ஆசிய சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்துள்ளார்.

இவர் வைத்தியர் ஹுஸ்னி மற்றும் சப்னம் சன்ஸிதாவின் புதல்வியாவார். இச்சிறுமி மிகப்பெரும் சாதனையாளராக தனது பெயரை ஆசிய சாதனை புத்தகத்தில் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வரின் உத்தரவுக்கமைய ஒரு இறைச்சிக்கடை பூட்டு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று மாநகர சபையின் விலை நிர்ணய தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்பட்ட இறைச்சிக்கடை ஒன்றை அக்கரைப்பற்று மாநகர முதல்வர் ஏ.அஹமட் ஸகியின் அறிவுறுத்தலுக்கமைவாக மாநகர சபை அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை (09) இழுத்து மூடப்பட்டுள்ளதாக முதல்வரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு இறைச்சி விற்பனையாளர் மாநகர சபையின் அளவீட்டுக்கு மாற்றமாக விற்பனை செய்ததை ஆதார பூர்வமாக நிரூபித்ததன் பின்னர் அக்கடை மூடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களிலும் ஏனைய இறைச்சி விற்பனை நிலையங்களும் தொடர்ந்தும் இவ்வாறு கண்காணிக்கப்படும் என்பதை மாநகர மக்களுக்கு அறியத்தருவதோடு, பொதுமக்களும் உரிமையுடன் உங்களின் பணத்திற்கு ஏற்ற பொருளை கேட்டு பெற்றுக்கொள்ள தயங்கக் கூடாது என்றும், முறைகேடுகளை 067 22 77 275 என்ற இலக்கத்துடன் அறியத்தரலாம் என்றும் மாநகர முதல்வர் மாநகர மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

## கிழக்கு பல்கலையினால் வன்முறை, தீவிரவாதத்துக்கு எதிரான வீதி நாடகம்

**திராய்க்கேணி நிருபர்**

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களால் வழங்கிய 'வன்முறை ராசா' வீதி நாடகம் அட்டாளைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பண்பாட்டு வாழ்வியலின் ஊடாக நல்லிணக்கத்தை கொண்டு வருதல், வன்முறை தீவிரவாதத்தில் இருந்து விடுபடுவதற்கு மனிதர்கள் எடுக்கின்ற முன்னெடுப்புகளும் செயற்பாடுகளும் இயல்பான பண்பாட்டு நடவடிக்கைகளும் இந்நாடகத்தின் கருவாக அமைந்தது.

மேலும் சாதியல் பிரிவினைகளை ஏற்படுத்தாது அனைவரும் வன்முறை அற்ற வாழ்க்கையை வாழ்வதுடன் சுமுகமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகின்றது.




இறுதியில் அனைவரும் ஒற்றுமையாகவும் வன்முறை அற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு நல்லிணக்கத்தின் முக்கியத்துவதங்களையும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளையும் அதனால் நாளாந்தம் மக்கள் அனுபவிக்கும் சவால்களையும் பேசுகின்றது. அனைவரும் வன்முறை இல்லாமல் ஒற்றுமையாக எவ்வாறு வாழலாம் என்பதை இந்நாடகம் அழகாக புலப்படுத்தியது.

## புணானை மயிலந்தனை படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல்




**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு புணானை மயிலந்தனை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மயிலந்தனை ஸ்ரீசிவ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் (9) நடைபெற்றது.

ஆலயத்தில் உயிர் நீத்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டி விசேட பூசை இடம்பெற்று நினைவு சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தி நினைவு கூரப்பட்டது.

பிரதேச மக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் மதகுருமார்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி சம்பவத்திற்கு நீதி வேண்டி ஜனாதிபதியின் கவனத்திற்கு தெரியப்படுத்தும் முகமாக, தங்களது கோரிக்கை அடங்கிய மகஜர் தயாரிக்கப்பட்டு ஊடகங்களின் பார்வைக்கு சமர்பிக்கப்பட்டது.

## கல்குடாவில் மரம் முறிந்து வீழ்ந்து வீட்டின் கூரை சேதம்



**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள பேத்தாழையில் தற்போது வீசி வரும் கடும் காற்றினால் வளவினுள் மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததினால் வீட்டின் கூரை சேதமடைந்ததுடன் பொருட்கள் சிலவும் சேதமடைந்துள்ளன.

வீட்டினுள் உறங்கிக்கொண்டிருந்த குழந்தை மற்றும் குழந்தையின் தாய் ஆகியோர்கள் காயங்கள் எதுவுமின்றி உயிர்தப்பியுள்ளனர். வீட்டின் கூரையை திருத்துவதற்கு வசதியற்ற நிலையில் அயலவர்களின் வீட்டில் இருப்பதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். மாவட்டத்தில் தற்போது வரட்சியுடன் கூடிய கச்சான் எனப்படும் காற்று கடும் வேகத்துடன் வீசுவதனால் வாழைமரங்கள், தென்னை போன்ற பலன் தரும் மரங்கள் முறிவடைவதுடன் வீட்டின் கூரைகளும் தூக்கி வீசப்படும் சம்பவங்கள் பிரதேசத்தில் நடந்துள்ளது.

### மலையக மக்களின் பிரச்சினைக்கு

# தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும்

## சபையில் மருதபாண்டி இராமேஸ்வரன் எம்பி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது கொள்கை விளக்க உரையில் குறிப்பிட்டுள்ளதை வரவேற்பதாக மருதபாண்டி ராமேஸ்வரன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆயிரம் ரூபா சம்பளம் தொடர்பில் ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக்க கோரி முதலாளிமார் சம்மேளனத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ள நிலையில் மலையக மக்களின் ஆயிரம் ரூபா சம்பளம் உறுதி யாகியுள்ளது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

எனினும் தற்போதுள்ள வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப அவர்களின் சம்பளத்தில் அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்ட அவர், அது தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்துடன் ஓரிரு தினங்களில் பேச்சுவார்த்தை நடத்தி முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

மலையக மக்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக யுத்தம் செய்தோ போராடியோ செயற்பட்டவர்கள் அல்ல.நாட்டின் பொருளாதாரத்திற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கும் அவர்களுக்கு அரசாங்கம் நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதேபோன்று கடந்த சில தினங்களாக மலையக பகுதியில் இடம்பெற்றுள்ள இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுரள்ள மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் அது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அடையாளம் காணப்படாத ஆணின் சடம் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

மாரவில தொடுவா வடக்கு பகுதியில், ஆண் ஒருவரின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

119 அவசர சேவைக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், இப்பகுதிக்கு விஜயம் செய்த பொலிஸார் சடலம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

எனினும், மேற்படி சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் 35 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். 5 அடி 6 அங்குலம் உயமுடைய குறித்த சடலத்தின் இரண்டு கைகளிலும் பச்சை அடையாளம் குத்தப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனை மற்றும் நீதிவான் விசாரணைகளுக்காக மாரவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# வாழ்க்கைச் செலவு தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உபகுழு

**ஷம்ஸ் பாஹிம்**

வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபசெயற்குழுவை நியமிக்கவும் உணவுப்பாதுகாப்புக் குழுவை அமைக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமையில் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறையின்றி சந்தைக்கு விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்தி வாழ்க்கைச் செலவை நிலையாகப் பேணுவதற்கு அவசியமான கொள்கை ரீதியான மற்றும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை அமைச்சரவைக்குப் பரிந்துரைப்பதற்காக ஜனாதிபதியின் தலைமையில் வாழ்க்கைச் செலவு தொடர்பான உபசெயற்குழுவை நியமிப்பதற்கும், இந்த உபசெயற்குழு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதற்காக சந்தை, வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரின் தலைமையின் கீழ் உணவுப் பாதுகாப்புக் குழுவை நியமிப்பதற்கும் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### காலவரையறையை அறிவித்தால்

# இடைக்கால நிர்வாகத்துக்கு பூரண ஆதரவு வழங்க எதிர்க்கட்சி தயார்

## எதிர்க்கட்சியின் பிரதம கொரடா சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

எதிர்க்கட்சியான எமது வேலைத்திட்டத்தையே ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க அரசாங்கத்தின் கொள்கையாக முன் வைத்துள்ளார். அதனால் அதற்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம் மூன்று வருடங்கள் மேற்கொண்டுள்ள தவறான வேலைத் திட்டங்களை ஜனாதிபதி அரை நிமிடங்களில் பின்னோக்கி எடுத்துச்சென்றிக்கின்றார் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாகத்துக்கு எதிர்கட்சியின் ஆதரவு அவசியமானால் அதற்கான கால வரையறையொன்றை ஜனாதிபதி அறிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

குறிப்பாக 19ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை மீள நடைமுறைப்படுத்துமாறு நாம் வேண்டுகோள் விடுத்து வந்துள்ளோம். பாராளுமன்ற துறைசார் மேற்பா'வைக்குழுவை மீள் ஸ்தாபிக்குமாறும் பொருளாதார. பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லுமாறு தெரிவித்தோம்.

அரசாங்கம் இவை எதனையும் கணக்கில் எடுக்கவில்லை. ஆனால் இன்று ஜனாதிபதி அவை அனைத்தையும் செயற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றார். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மூலம் கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் 3வருட வேலைத் தி'ட்டம் எந்த பிரயோசனமும் இல்லை என்பது தெளிவாகியுள்ளது. அரசாங்கத்தின் இந்த பிழையான வேலைத்திட்டத்தை மாற்றியமையக்க நாம் 3வருடங்களாக எடுத்த முயற்சியை ஜனாதிபதி அரை மணி நேரத்தில் மேற்கொண்டுள்ளதை நாம் வரவேற்கின்றோம்.

அப்படியானால் கடந் 3வருடங்கள் எந்த பிரயோசனமும் இல்லாமல் கழிந்துள்ளன என்பதை குறிப்பிட வேண்டும்.

பிரச்சினைகளுக்கு தீரவுகாண ஜனாதிபதி இடைக்கால நிர்வாகத்துக்கு ஆதரவளிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதியின் கோரிக்கைக்கு ஆதரவளிக்க நாம் தயார். ஆனால் இடைக்கால நிர்வாகம் எவ்வளவு காலத்துக்கு முன்னெடுக்கப்படும் என்பது வரையறுக்கப்படவேண்டும். காலவரையறையைத் தெரிவிக்காமல் ஜனாதிபதியின் இடைக்கால நிர்வாகத்துக்கு எதிர்க்கட்சியின் ஆதரவை வழங்க முடியாது.

மேலும் 2வருடங்களுக்கு இதனை இழுத்துச் செல்ல முடியாது. பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேலைத்திட்டம் அமைத்து, அதனை செயற்படுத்திக்கொண்டு பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு தேர்தலுக்கு செல்லவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

அவ்வாறில்லாவிட்டால் வங்குரோத்து அரசாங்கத்துக்கு சர்வதேச நாடுகள் நிதி உதவி செய்யப்போவதில்லை. நாட்டில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறே சர்வதேச நாடுகளும் கோரி வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சைக்கிள்களை திருடி வந்த பெண் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நகரில் வணிக வளாகங்களுக்கு முன், பூட்டு போடாமல் நிறுத்தி வைக்கப்படுகின்ற துவிச்சக்கர வண்டிகளை திருடியதாக கூறப்படும் பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் புவுதுபுர பகுதியைச்சேர்ந்த 34 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யப்பட்டவராவார். திருடுகின்ற துவிச்சக்கர வண்டிகளை வீட்டுக்கு கொண்டு சென்று, அவற்றுக்கு வண்ணம் தீட்டி, விற்பனை செய்து வந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பல மாதங்களாக நகரில் வணிக வளாகங்களுக்கு முன் நிறுத்திவைக்கப்படுகின்ற துவிச்சக்கர வண்டிகள் திருடப்படுவது தொடர்பில், விழிப்புடன் செயல்பட்ட பொலிஸார், சீ சீ ரீ வி காட்சிகளின் ஊடாக சந்தேக நபரை கைதுசெய்தனர்.

# காஷ்மீருக்குள்ள தனித்துவ அரசியல் அந்தஸ்தை பாதுகாப்பதே ஜனநாயக அரசியலை அர்த்தப்படுத்தும்





காஷ்மீரின் தனித்துவ அரசியல் அந்தஸ்து இழக்கப்பட்டமையை நினைவு கூரும் வைபவம் அண்மையில் (05) பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தில் இடம் பெற்றது.இந்நிகழ்வில், இலக்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உமர்பாரூக் பர்கி கலந்துகொண்டு உரையாற்றினார். இங்கு கருத்து தெரிவித்த அவர்,காஷ்மிரின் தனிப்பட்ட அரசியல் அந்தஸ்த்தை இல்லாமல் செய்த 2019,08,05 ஆம் திகதியை மறக்க முடியாது.இந்திய அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள இம்மக்களின் உரிமை ஒருதலைப்பட்சமாக மறுக்கப்பட்டுள்ளதாகவே நாம் கருதுகிறோம். இந்திய அரசியலமைப்பின் 370 மற்றும் 35A விதிகளை ரத்துசெய்தமை,ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை தீர்மானங்களை மீறும் செயல் மட்டுமின்றி, ஜம்மு காஷ்மீரை ஆக்கிரமித்துள்ளதாகவுமே நோக்க முடிகிறது.

காஷ்மீர் மக்களுக்கு எப்போதும் "பாகிஸ்தான் மதிப்பளிக்கிறது. சுயநிர்ணய உரிமைக்கான காஷ்மீரின் போராட்டத்தையும்,அம்மக்களின் உறுதியான நம்பிக்கையையும் பாகிஸ்தான் பெரிதும் போற்றுகிறது என்றார். வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்பாளர் திருமதி அஸ் மாகமால், பாகிஸ்தான் ஜனாதிபதி டாக்டர்ஆரிஃப்அல்வியின், இத்தினம் குறித்த செய்தியையும், பிரதமர் முஹம்மது ஷாபாஸ்ஷரீப்பின் செய்தியையும் ஊடக இணைப்பாளர் திருமதி கல்சூம்கைசர் பார்வையாளர்களுக்காக வாசித்தார்.

# டிப்பர் வண்டியில் டீசல் திருட்டு பிரதேச சபை செயலாளருக்கு இடமாற்றம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் கிழக்கு நுவரகம் பிரதேச சபைக்குச் சொந்தமான. டிப்பர் வண்டியில் டீசல் திருடியதாக குற்றச்சாட்டில், அச்சபையின் செயலாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். உடனடியாக. நடைமுறைக்கு வரும் வகையில் வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு, இவர் இடமாற்றப்பட்டுள்ளார். குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரதேச சபையின் செயலாளர் தொடர்பில், விரிவான விசாரணை நடத்துவதற்கு ஏற்கனவே வடமத்திய மாகாண உதவி ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் வடமத்திய மாகாண செயலாளர் ரோய் நிஷாந்த தெரிவித்தார்.


**afc** தங்கக் கடன் சேவை
தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.05.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 25.08.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
722, கோட்டை வீதிஇராஜகிரிய
25.08.2022

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600



திகதி 09.08.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4842 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,915,190.00 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 4 5 5 3 7 2 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,696,320.60

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 151 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,609,200.00 — இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 04 13 15 54 — விசேட இலக்கினம் துலாம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,655,149.60

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3084 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,889,460.00 — ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 09 29 39 53 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,291,827.20

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 872 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,238,200.00 — வெற்றி இலக்கினம் B — வெற்றி இலக்கங்கள் 05 06 24 64 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,700,756.40

கோடி 26+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1190 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,885,360.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 264,862,358.00 — ஆங்கில எழுத்து G — சுப்பர் நம்பர் 25 — வெற்றி எண்கள் 12 16 68 74 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



# பெறுகை அறிவித்தல்

## கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்

2022/2023 ஆண்டிற்காக கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்திற்குப் பின்வரும் சேவையை வழங்குவதற்குத் தகைமை உள்ள நிறுவனங்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் (NCB) கீழ் முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

| பெறுகை இலக்கம் | விபரம் | விலைமனுப் பிணையம் ரூபா | செல்லுபடிக்காலம் (நாட்கள்) |
|---|---|---|---|
| GWUIM/GA/PROC/2022/05/SEC | பாதுகாப்புச் சேவையை வழங்கல் | 150,000.00 | 2022.12.15 வரை அல்லது அதற்கு மேல் |

**தகைமைகள்:**

1. அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் தொடர்பாக வியாபாரப் பதிவு முதல் குறைந்தபட்சம் 05 ஆண்டுகளிற்குக் குறையாத சேவை அனுபவமுள்ள மற்றும் அக்காலப்பகுதியில் குறைந்தபட்சம் 02 ஆண்டு காலம் அரச பல்கலைக்கழகம் அல்லது தனியார் பல்கலைக்கழகங்களிற்கு திருப்திகரமான முறையில் பாதுகாப்புச் சேவையை வழங்கியுள்ள மற்றும் அபகீர்த்தியானோர் (Black list) பட்டியல்படுத்தப்படாத நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.
2. பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்புப் பிரிவில் பதிவு செய்யப்பெற்றுள்ள வருடாந்தம் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள உரிமம் ஒன்று இருத்தல் வேண்டும்.
3. 2021.03.31 வரையான 03 வருடங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற மொத்த இருப்புச் சுழற்சி (Average Annual Turnover) 20.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெறுமானம் மற்றும் செல்லுபடிக் காலத்துடன் கூடிய, இலங்கையில் பதிவு செய்யப்பெற்றுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து, உபவேந்தர், கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட மீளளிக்கப்படும்.

விலைமனுப் பிணையமொன்று அல்லது இப்பல்கலைக்கழக சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதிப் பதிவாளர் பொது நிருவாகம் (033-2223784 அல்லது 033-2222748/740, சேவை நீடிப்பு இல 136) மூலம் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன் வேலை நாட்களில் இலவசமாக விலைமனுப்படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

இதற்கான களப்பரிசீலனை 2022.08.18 முதல் 2022.08.26 வரை வார வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 02.00 வரை மேற்கொள்ளலாம். இது தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று (Pre-Bid Meeting) 2022.08.23 அன்று மு.ப. 10.00 இற்குப் பல்கலைக்கழக நிருவாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள குழுக் கூட்ட மண்டபத்தில் நடைபெறுவதுடன் இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்களின் வரவு எதிர்பார்க்கப்படுகின்றது.

அனைத்து விலைமனுப்படிவங்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022.08.12 முதல் 2022.08.31 வரை வாரவேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 02.30 வரை, தம் நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் எழுத்துருவ விண்ணப்பக்கடிதமொன்றை இப்பல்கலைகழகத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத ரூபா 5,000.00 வைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டுடன் பிரதிப் பதிவாளர், பொது நிருவாகம் இற்குச் சமர்ப்பித்து இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென தனித்தனியாகக் குறிப்பிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளிட்டு முத்திரையிட்டு மீண்டும் அவற்றை ஒரு தபாலுறையில் உள்ளிட்டு முத்திரையிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் குறித்த பெறுகைத் தலைப்பு ‘கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்திற்குப் பாதுகாப்புச் சேவைகளை வழங்கல் - 2022/2023’ எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.09.01 அன்று பி.ப. 02.00 இற்கு முன்னர், நிருவாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பதிவாளர் அலுவலகத்திற்கண்மையில் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்புச் சேவைகளை வழங்கல் 2022/2023 இற்கான கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

திணைக்களப் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் விலைமனுப்படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக நிருவாகத்திற்கப்பால் நாட்டில் ஏற்படும் அவசரகால நிலைமைகள் தொடர்பான மேற்படி தினங்களில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட நேரிடின் அது தொடர்பாக விபரங்கள் பல்கலைக்கழக www.gwu.ac.lk என்ற இணையத்தின் மூலம் அறிவிக்கப்படும்.

**தவலைர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**கம்பஹா விக்ரமாராச்சி சுதேச. மருத்துவப் பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி, யக்கல.**
**2022.08.11**

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 ஒகஸ்ட் 11 வியாழக்கிழமை

# இலங்கையின் குறுந்தூர வீரர் ஹிமாஷவுக்கு போட்டித் தடை



100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பல ஆண்டுகள் தேசிய சம்பியனாக இருந்த இலங்கை குறுந்தூர ஓட்ட வீரர் ஹிமாஷ ஏஷானுக்கு இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனம் நான்கு ஆண்டுகள் போட்டித் தடை விதித்துள்ளது.

100 மீற்றரில் தெற்காசிய சம்பியனுமான ஹிமாஷ, கடந்த ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி இலங்கை இராணுவத் தலைமையகத்திற்கு வழங்கிய சிறுநீர் மாதிரியில் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு தற்காலிக போட்டித் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் கடந்த ஜூன் 03 ஆம் திகதி ஹிமாஷவுக்கு ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டதோடு அதில் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது.

இவ்வாறு குற்றங்காணப்பட்டது மற்றும் உலக ஊக்கமருந்து தடுப்பு நிறுவனம் மற்றும் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் தீர்மானத்திற்கு அமைய அவர் மீது 2021 ஒக்டோபர் 26 தொடக்கம் 2025 ஒக்டோபர் 25 வரை 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் ஹிமாஷவுக்கு மெய்வல்லுனர் போட்டியுடன் தொடர்புபட்ட எந்த ஒரு போட்டியிலும் பங்கேற்பது அல்லது பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# லங்கா பிரீமியர் லீக் தொடர் 2022 டிசம்பரில்



லங்கா பிரீமியர் லீக் தொடர் வரும் 2022 டிசம்பர் மாதத்தில் நடைபெறும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடரை ஒகஸ்ட் மாதத்தில் நடத்த அட்டவணைப்படுத்தப்பட்டபோதும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.


'எல்.பி.எல் தொடர் வரும் டிசம்பர் 6 தொடக்கம் 23 ஆம் திகதி வரை நடைபெறும் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறேன்' என்று இந்தத் தொடரின் ஏற்பாட்டாளர் சமந்த தொடன்வெல ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

எல்.பி.எல் தொடரில் ஐந்து அணிகள் பங்கேற்கின்றன. 2020 ஆம் ஆண்டு ஆரம்பமான இந்தத் தொடரின் முதல் இரண்டிலும் ஜப்னா கிங்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றது. அதேபோன்று கோல் கிளாடியேட்டர்ஸ் இரண்டு தொடரிலும் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

தவிர, கொலம்போ ஸ்டார்ஸ், கண்டி பல்கோன்ஸ் மற்றும் தம்புல்ல ஜயன்ட் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இலங்கை அணி வரும் நவம்பரில் மேற்கிந்திய தீவுகளுடன் டெஸ்ட் தொடர் ஒன்றில் பங்கேற்கவிருப்பதோடு டிசம்பர் கடைசியில் ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்கு இந்தியா பயணிக்கவுள்ளது. இதற்கு மத்தியில் இந்த தொடர் நடைபெறவுள்ளமை வீரர்களுக்கு பரபரப்பான கால அட்டவணையைக் கொண்டிருக்கும். இந்தத் தொடரின் போட்டிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப் போன்று கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் மைதானங்களில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

# நடுவர் ருடி கேட்சன் கார் விபத்தில் பலி



தென்னாபிரிக்காவைச் சேர்ந்த சர்வதேச கிரிக்கெட் நடுவரான ருடி கேட்சன் கார் விபத்து ஒன்றில் காலமானார். ரிவர்ஸ்டேலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் மேலும் மூவர் பலியாகினர்.

73 வயதான கேட்சன் வார இறுதியில் கொல்ப் விளையாடி விட்டு கேப்டவுனில் இருந்து வீடு திரும்பும் வழியிலேயே விபத்துக்கு உள்ளாகியுள்ளார். இதனை அவரது மகன் டுடி கேட்சன் ஜூனியர் உறுதி செய்துள்ளார்.

2002 தொடக்கம் எட்டு ஆண்டுகள் ஐ.சி.சி எலைட் குழு நடுவராக இருந்த கேட்சன் 331 சர்வதேச போட்டிகளில் நடுவராக செயற்பட்டுள்ளார்.

SINCE 1978 44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் **OBSERVER SLT- MOBITEL** மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..............................

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ..............................

வாக்களித்தவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

மொபைல் இல. : ..............................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 13-08-2022 இல. 20




# அல்–ஹம்றா தேசிய பாடசாலை மாகாண மட்டத்திற்குத் தெரிவு

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



ஒலுவில் அல்–ஹம்றா தேசிய பாடசாலை கிரிக்கெட் அணியினர் மாகாண மட்ட போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியான கிரிக்கெட் போட்டியில் ஒலுவில் அல்–ஹம்றா தேசிய பாடசாலை இறுதிப் போட்டிக்கு தெரிவாகி முதலாமிடத்தை பெற்றது.

இந்த போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்த அயராது முயற்சிகளை மேற்கொண்ட உடற்கல்வி ஆசிரியர்களான ஆர். நௌஸாத், ஏ.எம்.எம். கியாஸ் மற்றும் பயிற்றுவிப்பாளர்களான ஏ.ஏ.அஸ்மத் ஸஹி, எம். முனாஸிர் ஆகியோருக்கும் இதற்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம் மற்றும் உதவி அதிபர் எம்.எச்.எம். நஸீம் ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறது.

# தேசிய விளையாட்டுச் சபையின் தலைவராக ரணதுங்க நியமனம்



தேசிய விளையாட்டு சபையின் புதிய தலைவராக முன்னாள் அமைச்சரான அர்ஜுன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். அவர் உட்பட தேசிய விளையாட்டு சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கான நியமனக் கடிதம் விளையாட்டு அமைச்சர் ரொசான் ரணசிங்கவினால் நேற்று வழங்கப்பட்டது.

இதற்கு முன்னர் இந்த சபையின் தலைவராக செயற்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி அப்போதைய விளையாட்டு அமைச்சராக இருந்த நாமல் ராஜபக்ஷவின் பதவி விலகலுடன் இராஜினாமா செய்தார்.

விளையாட்டு சபையின் அங்கத்தவராக அப்போது குமார் சங்கக்காரவும் செயற்பட்டார். 14 அங்கத்தவர்களுடன் செயற்பட்ட இந்த சபையில் முன்னர் இருந்த குழுவுக்கு நிகரான குழு ஒன்று இம்முறையும் நியமிக்கப்பட்டுள்ளது.

தேசிய விளையாட்டு சபையின் முதல் பணியாக விளையாட்டு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் கொள்கைகளை தயாரிப்பது அமைகிறது.

## சர்வதேச செய்திகள்

# ஆற்றில் சிக்கிய திமிங்கிலத்தை வெளியேற்றும் பணிகள் ஆரம்பம்



பிரான்ஸின் செயின் ஆற்றில் சிக்கிய பெலுகா திமிங்கிலத்தை காப்பற்றும் நடவடிக்கையின் முதல் கட்டமாக அந்த திமிங்கிலம் ஆற்றில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

13 அடி நீளமான இந்தத் திமிங்கிலம் வழக்கமாக அதிக குளிரான ஆர்டிக் நீரிலேயே காணப்படுகிறது. ஆங்கில நீரிணை வழியாக பாரிஸ் ஆற்றுக்குள் நுழைந்த இந்தத் திமிங்கிலம் கடந்த ஒரு வாரமாக அங்கு சிக்கிக் கொண்டது. இந்நிலையில் பாரந்தூக்கியுடன் இணைக்கப்பட்ட வலையைக் கொண்டு மீட்புப்பணிக் குழு 800 கிலோகிராம் எடையிலான அந்தத் திமிங்கிலத்தை ஆற்றில் இருந்து வெளியேற்றியது.

மீட்புத் திட்டத்தின் அடுத்த கட்டமாகத் திமிங்கிலம் குளிர்சாதன வாகனத்தில் ஏற்றப்பட்டுக் கடலின் கரையோரத்துக்குக் கொண்டுசெல்லப்படும் என்று இயூரே மாநில பொதுச் செயலாளர் இசபெல் டோர்லியாட்–போஸே தெரிவித்தார். இந்தத் திமிங்கிலம் திறந்த கடலுக்கு விடுவிக்கப்படும் முன் பல நாட்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மீட்பாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

# மேற்கத்திய ஆயுதங்களில் உக்ரைனை அடைவது 30%



மேற்கத்திய உலகம் வழங்கிய ஆயுதங்களில் 30 வீதமானவை மாத்திரமே உக்ரைன் முன்னரங்கு நிலைகளை அடைந்திருப்பதாக சி.பி.எஸ் நியுஸ் அறிக்கை ஒன்று கணித்துள்ளது.

கடந்த பெப்ரவரி தொடக்கம் உக்ரைனுக்கு 54 பில்லியன் டொலருக்கு மேல் பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா ஒப்புதல் அளித்த நிலையில், பிரிட்டன் இராணுவ உதவியாக மாத்திரம் 3 பில்லியன் டொலர்களுக்கு ஒப்புதல் அளித்ததோடு ஐரோப்பிய ஒன்றியம் உக்ரைனுக்கு 2.5 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது.

'இந்த அனைத்துப் பொருட்களும் எல்லையைக் கடந்து சென்றபோதும் அதன்பின் ஏதோ நிகழ்கிறது. இதில் 30 வீதமானவையே அதன் இறுதி இலக்கை எட்டுகின்றன' என்று உக்ரைன் இராணுவத்திற்கு விநியோகங்களை மேற்கொள்ளும் லிதுவேனியாவைத் தளமாகக் கொண்ட அமைப்பு ஒன்றின் நிறுவனரான ஜானஸ் ஒஹ்மான் சி.பி.எஸ் நியுஸ் நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

# ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமைக்கு உலமாவே இஸ்லாம் அழைப்பு



வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் ஆண்டு நிறைவை ஒட்டி அனைத்து இந்திய தன்சீம் உலமாவே இஸ்லாம் அமைப்பு கடந்த திங்களன்று பிரமாண்ட நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதில் வரலாற்றில் இந்த இயக்கத்தின் முக்கியத்துவத்தை தன்சீமின் செயலாளர் நாயகம் மௌலானா ஷஹாபுத்தீன் ரஸ்வி ஞாபகமூட்டினார்.

ஹிந்து மற்றும் முஸ்லிம்கள் இணைந்து இந்தியாவை விடுதலை பெறச்செய்து பிரிட்டிஷாரை ஏழு கடலுக்கு அப்பால் வெளியேறச் செய்தோம் என்று கூறிய ரிஸ்வி, தற்போது இரு சமூகங்களினதும் மக்கள் மீண்டும் ஒன்றிணைந்து இந்தியாவின் முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்திற்காக பணியாற்றி இந்தியாவை புதிய உச்சத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றார்.

1942 ஒகஸ்ட் 8ஆம் திகதி மும்பாயில் நடைபெற்ற அனைத்து இந்திய கொங்கிரஸ் குழுக் கூட்டத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை மோஹன்தாஸ் கரம்சன்ட் காந்தி ஆரம்பித்தார் என்றும் ரிஸ்வி குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.